# வானவில்

# VAANAVIL

இதழ் 185 | வைகாசி 2026

ISSUE 185 | MAY 2026


# மாகாண சபைத் தேர்தல் உடனும் நடத்தப்பட வேண்டும்!




இலங்கை அரசியலில் பெரும்பாலான கட்சிகளால் கவனிக்கப்படாத ஒரு முக்கியமான பிரச்சினை இருந்து வருகிறது.

அதாவது மாகாண சபைத் தேர்தல் பற்றிய பிரச்சினையே அது. பெரும்பாலான மாகாண சபைகளுக்கு பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமல், அரச அதிகாரிகளாலேயே அவை நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு அதிகார வர்க்கத்தால் அவை நிர்வகிக்கப்படும் போது, இரண்டு விதமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஒன்று, இந்த அதிகாரிகளுக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் தேவைகள் என்னென்ன என்பது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்குத்தான் அவர்களின் தேவை என்ன என்பது தெரிய வரும்.

இரண்டாவது, மாகாண சபைகளுக்கென அரசாங்கம் பெருந்தொகையான நிதியை ஒதுக்குகின்றது. அந்த நிதி அந்தச் சபைகளை நிர்வகிக்கும் அதிகாரிகளால் எவ்வாறு, என்னென்ன தேவைகளுக்கு செலவழிக்கப்படுகிறது என்ற விபரமும் பொதுமக்களுக்குத் தெரிவதில்லை.

மாகாண சபைகளின் இந்த மோசமான இன்றைய நிலைக்கு காரணகர்த்தாக்களாக இரண்டு தரப்பினரைக் குறிப்பிட முடியும்.

ஒரு தரப்பினர், இந்த மாகாண சபைகள் செயல்பட்டு சிறுபான்மை இன மக்களுக்கு ஒரு சிறிய நன்மை கூடக் கிடைத்துவிடக்கூடாது என்று கருதுகின்ற, அரசுக்குள்ளும் வெளியிலும் இருக்கின்ற தீவிரமான சிங்களப் பேரினவாத சக்திகள்.

மறு தரப்பினர், இந்த மாகாண சபைகளால் தமிழ் மக்களுக்குப் பிரயோசனம் எதுவுமில்லை எனக் கூறி அதை ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்து வந்த தீவிரமான தமிழ் பிரிவினைவாத சக்திகள்.

இலங்கை இனப் பிரச்சினை 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் உள்நாட்டு யுத்தமாக மாற்றப்பட்டு, தமிழ் மக்கள் மீது மோசமான இன ஒடுக்குமுறை அரச பயங்கரவாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டு, அதற்குப் பதிலாக தமிழ் போராளிக் குழுக்களால் விடுதலைப் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு சூழலிலேயே, இலங்கையின் அயல்நாடான இந்தியா (தனது நலன் கருதியும்) இதில் தலையிட வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இந்தியாவின் தலையீடு காரணமாகவே அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் “இந்திய – இலங்கை ஒப்பந்தம்” என்ற பெயரில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டு, அதன் மூலம் இலங்கை அரசியல் அமைப்பில் 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு, அதனூடாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

இந்த மாகாண சபைகள் வடக்கு கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் நோக்குடன் கொண்டு வரப்பட்டாலும், பெரும்பான்மை சிங்கள மக்கள் அதைப் பிரிவினைவாதம் எனத் தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது என்ற காரணத்தால், சமயோசித சிந்தனையுடன் ஒன்பது மாகாணங்களிலும் அந்தச் சபை அமைக்கப்பட்டது. அதன் காரணமாக சிங்கள மக்களும் எவ்வித எதிர்ப்பும் இன்றி மாகாண சபை நடவடிக்கைகளில் பங்குபற்றும் சூழல் ஏற்பட்டது.

ஆனாலும், இந்திய – இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்ட சமயத்திலேயே சிங்கள – தமிழ் இனவாத சக்திகள் தமது தீவிரமான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

சிங்களத் தரப்பைப் பொறுத்தவரை, ஜெயவர்த்தன அரசின் பிரதமர் ஆர்.பிரேமதாச தலைமையில் ஒரு சக்திவாய்ந்த குழுவினரும், சிறீலங்கா

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ஆட்சிமாற்றம் என்பது அமைப்பு மாற்றமாகிவிட முடியுமா?

இலங்கையில் அநுர குமார திசாநாயக்க மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன (JVP) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (NPP) பதவிக்கு வந்து 20 மாதங்கள் (ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் முறையே 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதியும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதியும் நடைபெற்றன) ஆகின்றன. இலங்கையில் 'அமைப்பு மாற்றம்' (System change) ஒன்றினை ஏற்படுத்தப்போவதாகக் கூறி பதவிக்கு வந்த இவர்களுக்கு, இன்னுமொரு 40 மாத காலவகாசம் இருக்கின்றது சிறியளவிலேனும் 'மாற்ற'த்தை ஏற்படுத்துவதற்கு.

தற்போதைய ஆட்சியாளர்கள் – ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் – தேர்தல் பிரச்சாரங்களில் ஊழலை ஒழிப்போம், வாழ்க்கைச் செலவைக் குறைப்போம், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டை நிறுத்துவோம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அகற்றுவோம், புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம் என்று பலவித உறுதிமொழிகளைக் கூறியே பதவிக்கு வந்தனர். இவற்றில் ஏதேனும் ஒன்றையாவது முழுமையாக நிறைவேற்றியுள்ளார்களா என்பதற்கு வாக்களித்த மக்கள்தான் பதில் கூற வேண்டும்.

ஊழல் இல்லாத ஆட்சியை வழங்குவதாக உறுதியளித்த தற்போதைய NPP அரசு, ராஜபக்ச அரசில் அங்கம் வகித்த அமைச்சர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், ராஜபக்சவின் குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட பலரைக் கைது செய்து, சிறையிலடைத்து விசாரணைகளை நடத்தி, நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. அதேநேரத்தில், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு, பணமோசடி சட்டத்தின் கீழ் தற்போதைய அரசாங்கத்தின் ஆறு அமைச்சர்களின் சொத்துக்கள் தொடர்பிலும் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

ஏப்பிரல் 10 ஆம் திகதி, நிலக்கரி மோசடி தொடர்பில் மின் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணையொன்று தோற்கடிக்கப்பட்டது. (பாராளுமன்றத்தில் அரசாங்கத்தக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால், அரசாங்கத்துக்கு எதிராக எந்த பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் அதனை அரசாங்கம் தோற்கடித்துவிடும் என்பது தெரிந்ததே) நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்ட போதிலும், இந்த நிலக்கரி கொள்வனவில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளது என்பது பகிரங்கத்திற்கு வந்ததால், ஏப்பிரல் 17 ஆம் திகதி அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவால் இலங்கைக்கு 7.67 பில்லியன் ரூபா அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. நிலக்கரி கொள்வனவில் மோசடி இடம்பெற்றிருப்பதை அரச கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசில் தரமற்ற மருந்தை கொள்வனவு செய்ததாகக் குற்றஞ்சாட்டி, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவை கைது செய்து சிறையில் அடைத்து வழக்குத்தாக்கல் செய்த அரசு, முன்னாள் அமைச்சர் குமார ஜயகொடி மீது இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முன்னைய நிர்வாகத்தின், குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் செயற்பாடுகளையே தற்போதைய NPP/JVP அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. மிகவும் அனுபவம் வாய்ந்த மற்றும் திறமையான அதிகாரிகள் அமர வேண்டிய சில சிரேஷ்ட பதவிகள், NPP/JVP இற்கு விசுவாசமானவர்கள் என்ற ஒரேயொரு காரணத்தை அடிப்படையாக வைத்து பொருத்தமான தகுதிகள் மற்றும் பின்னணிகளற்றவர்களால் நிரப்பப்படுகின்றன.

சொந்த ஆதரவாளர்களை மூத்த பதவிகளுக்கு நியமிப்பது அரசியலில் அசாதாரணமானது அல்ல. ஆனால் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பதவிகளுக்கான அடிப்படை தகுதிகள் அல்லது பொருத்தமான அனுபவங்கள் இல்லாதபோது, அது பொதுமக்களின் நம்பிக்கைக்கு துரோகம் இழைப்பதாகிவிடும். இதற்கு சிறந்த உதாரணம் கருவூல செயலாளரின் (Treasury secretary) நியமனம். கிட்டத்தட்ட NPP இன் ஒவ்வொரு தேர்தல் பிரச்சார நிகழ்விலும் இவர் கலந்து கொண்டுள்ளார். அவருக்கு கலாநிதிப் பட்டம் மற்றும் ஏனைய தராதரங்கள் இருந்தாலும், முக்கிய கேள்வி என்னவென்றால், அந்தப் பட்டமும் தராதரங்களும் குறிப்பிட்ட பதவிக்கு பொருத்தமானதா மற்றும் அவரின் இலாகாவிலுள்ள அனுபவம் வாய்ந்த அதிகாரிகளின் குழுவை வழிநடத்த அவருக்கு போதிய அனுபவம் உள்ளதா என்பதாகும்.

NPP/JVP முகாமுக்குள் பல மாதங்களாக விவாதங்கள் மற்றும் பிளவுகள் பற்றிய ஊகங்களை அடுத்து, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் முயற்சியில் எதிர்க்கட்சியில் இருந்து திறமையான பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் சேர அழைப்பது குறித்து பரிசீலிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் சில சிரேஷ்ட NPP/JVP உறுப்பினர்கள் கோரியதாக 'டெயிலி மிரர்' பத்திரிகை மே 18 ஆம் திகதி செய்தியொன்றினை வெளியிட்டுள்ளது.

பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் அண்மையில் நடந்த ஒரு கூட்டத்திலேயே, ஜே.வி.பி.யின் சிரேஷ்ட குழுவினர், முடிவுகளை மேற்கொள்ளுவதிலும் பலவீனமடைந்துவரும் இலங்கை பொருளாதாரத்தை சமாளிப்பதிலும் தேசிய மக்கள் கட்சிக்கு உதவுவதற்காக, எதிர்க்கட்சியில் இருந்து சில தகுதிவாய்ந்த மற்றும் பொருத்தமான பாராளுமன்ற உறுப்பினர்களை அழைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டிய ஒரு பிரேரணையைப் பற்றி கலந்துரையாடியுள்ளனர். எனினும், ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்த பிரேரணையை நிராகரித்து, ஜே.வி.பி. தனது சொந்த நிலைப்பாட்டில் உறுதியோடு தொடர வேண்டும் என்றும், இந்த நேரத்தில் அவ்வாறான எந்தவொரு அழைப்பையும் விடுக்கக் கூடாது என்றும் கூறியிருக்கிறார்.

முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் மிகப்பெரிய பலவீனமே போலிவாக்குறுதிகளால் ஆளுங்கட்சியை இலகுவாக வீழ்த்தி எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்பதே. ஆட்சிமாற்றம் என்பது அமைப்பு மாற்றத்திற்கு இட்டுச் செல்லாது என்பது இலங்கையில் கடந்த 10 வருடத்தில் இரண்டு தடவைகள் நிரூபிக்கப்பட்டுள்ளது. சமூக அமைப்பின் ஒவ்வொரு துறைகளிலுமுள்ள குறைபாடுகளுக்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து, அவற்றை ஒவ்வொன்றாகக் களைவதினூடாக மாத்திரமே அமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தலாம். இதனை மக்கள் தெளிவாக விளங்கிக்கொண்டு எதிர்காலத்தில் தங்கள் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டால், ஒருபோதும் இலங்கையை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்ல முடியாது.

## புரட்சிகர மேதின வாழ்த்துக்கள்!

சர்வதேச ஐக்கியம் மற்றும் தோழமையுணர்வு என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த மனித குலத்தின் அமைதி மற்றும் மகிழ்வான எதிர்காலத்திற்காக போராடி வரும், உலகெங்கிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தை மே தினத்தன்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

–'வானவில்' ஆசிரியர் குழு

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com
'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்!

*- கியூபா ஜனாதிபதி*

**கி**யூபா கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது செயலாளரும், ஜனாதிபதியுமான மிகேல் டியஸ் கானெல் பெர்முடெஸ் (Miguel Díaz-Canel Bermúdez), அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற 'நியூஸ் வீக்' சஞ்சிகையின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைப் பிரிவின் பொறுப்பாளர் ரொம் ஓ'கானருக்கு (Tom O'Connor) வழங்கிய செவ்வி:



**கேள்வி:** அமெரிக்காவும் கியூபாவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும், அறிவியல், புலம்பெயர்வு, போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான போராட்டம் போன்ற ஒத்துழைப்புத் துறைகளை முன்மொழிந்துள்ளதாகவும், நீங்கள் உறுதிப்படுத்தியுள்ளீர்கள். அதிபர் ட்ரம்ப் கியூபாவில் ஆட்சி மாற்றத்தை நாடுவதாகத் தெரிகிறது. ஒரு உடன்பாட்டை எட்டுவதும், இராஜதந்திரம் வெற்றி பெறுவதும் சாத்தியம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்:** உரையாடல் சாத்தியம் என்றும், நம்மால் சில உடன்பாடுகளை எட்ட முடியும் என்றும் நினைக்கிறேன். ஆனால் அது கடினமானது. இந்த இரண்டு விடயங்களையும் நம்மால் ஏன் கூற முடிகிறது?

புரட்சியின் அனைத்து ஆண்டுகளிலும், நமது சித்தாந்த வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், கியூபா எப்போதும் அமெரிக்காவுடன் ஒரு நாகரிகமான, அண்டை வீட்டு உறவைப் பேணத் தயாராக இருந்ததால் நம்மால் உரையாடலில் ஈடுபட முடிகிறது.

நாம் இணைந்து செயல்படக்கூடிய பொதுவான துறைகள் உள்ளன. அவ்வாறு செயல்படுவது மட்டுமல்லாமல், இருநாட்டு மக்களுக்கும் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் ஒப்பந்தங்களையும் நம்மால் எட்ட முடியும்.

இருப்பினும், அது நமது இறையாண்மை, நமது அரசியலமைப்பு, நமது சுயநிர்ணயம் ஆகியவற்றை மதித்து, பரஸ்பர பரிமாற்றம் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு இணங்குதல் ஆகியவற்றின் அடிப்படையில், சமமான நிபந்தனைகளுடன் கூடிய ஒரு மரியாதைக்குரிய உரையாடலாக இருக்க வேண்டும் என நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வருகின்றோம்.

உரையாடல் சாத்தியமென்றே நான் கருதுகிறேன். ஏனெனில், பல்வேறு காலகட்டங்களில் மற்ற அமெரிக்க நிர்வாகங்களுடன் நாம் உரையாடலில் ஈடுபட்டு, பொதுவான நலன் சார்ந்த பிரச்சினைகளைக் கையாண்டிருக்கிறோம். சில சமயங்களில், மற்றவற்றை விட நாம் அதிக வெற்றி கண்டிருக்கிறோம். ஆனால், இந்த இரண்டு காரணங்களும் இந்த சாத்தியக்கூறு ஏன் உள்ளது என்பதை விளக்குகின்றன.

மறுபுறம், இந்த உரையாடலுக்குத் தடையாக இருக்கும் காரணிகள் யாவை? முதலாவதாக, அமெரிக்க சமூகத்திற்குள்ளேயே கியூபாவுடனான எந்த உரையாடலையும் கடுமையாக எதிர்க்கும் பிரிவுகள் உள்ளன.

மேலும், கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு சமச்சீரற்றதாக உள்ளது. இதில் வல்லரசான அமெரிக்கா எப்போதும் ஆக்கிரமிப்பாளரின் பாத்திரத்தை வகித்து வருகிறது. சிறிய தீவான கியூபா எப்போதும் தாக்கப்படும் நாடாக இருந்து வருகிறது.

நாங்கள் அடிக்கடி பேச்சுவர்த்தைகள் நடத்தி ஒப்பங்களை எட்டியுள்ளோம். மேலும், கியூபாவும் எப்போதும் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றி வந்துள்ளது. இருப்பினும், பல சந்தர்ப்பங்களில், அமெரிக்க அரசாங்கம் தனது சொந்த வாக்குறுதிகளை மதிக்கத் தவறியுள்ளது.

ஆனால் மறுபுறம், கடந்த 67 ஆண்டுகளாக, அமெரிக்காவிடமிருந்து பகைமை, ஆக்கிரமிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் அடங்கிய கொள்கையும், தீவிரப்படுத்தப்பட்ட முற்றுகைக் கொள்கையும் இருந்து வருகின்றன. தற்போது இந்தக் கொடூரமான எரிசக்தி முற்றுகையின் மூலம் அது இன்னும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவிடமிருந்து நமது நாடு ஒரு பன்முகத் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதும், அது மக்களின் வாழ்வில் பேரழிவை ஏற்படுத்தி வருவதும் தெளிவாகத் தெரிகிறது.

மறுபுறம், அமெரிக்க அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் உள்ளன. மற்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறிவிட்டு, பின்னர் அவற்றைத் தாக்குவது, இவை அனைத்தும் சந்தேகமின்றி நம் மக்களிடையே அவநம்பிக்கையை உருவாக்கின்றன.

ஆனால், நாம் உரையாடல்களிலும் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு, உடன்படிக்கைகளை எட்ட முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன். இடம்பெயர்வு, பாதுகாப்பு, சுற்றுச்சூழல், அறிவியல் மற்றும் புத்தாக்கம், கல்வி, கலாச்சாரம், வர்த்தகம், விளையாட்டு போன்ற விடயங்களில் நாம் உடன்படிக்கைகளை எட்ட முடியும். மேலும், அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து கியூபாவுக்கு முதலீடுகளை ஈர்த்து, நமது இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தையும் நாம் மேம்படுத்த முடியும்.

நமது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் பரஸ்பரம் நன்மை பயக்கும் திட்டங்களை நாம் செயல்படுத்தலாம். இத்துறையில் உரையாடல் வலுப்படுத்தப்பட்டு, உடன்படிக்கைகள் எட்டப்பட்டால், அவை இரு நாடுகளுக்கும் இருநாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

மோதல்களில் இருந்து நம்மை விலக்கி, புரிதலுக்கான இடங்களை உருவாக்குவதில் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க இது நமக்கு வழிவகுக்கும். ஏனென்றால், கியூப மற்றும் அமெரிக்க மக்கள் போரில் சிக்கிக் கொள்வதற்குப் பதிலாக, அமைதி, நட்பு மற்றும் ஒத்துழைப்பு நிறைந்த சூழலில் இணைந்து செயல்படத் தகுதியானவர்கள் என்று நான் நம்புகிறேன்.

**கேள்வி:** பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் இராணுவ நடவடிக்கை எடுக்கும் வரலாறு அமெரிக்க நிர்வாகத்திற்கு உண்டு என நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். வெனிசுவேலா, ஈரான் விவகாரங்களில் இதை நாம் பார்த்திருக்கின்றோம். மேலும், அடுத்ததாக கியூபா இருக்கலாம் என அதிபர் ட்ரம்ப் சில அறிக்கைகளில் கூறியிருக்கிறார். இராஜதந்திர முயற்சிகள் தோல்வியுற்றால் அல்லது விரும்பிய முடிவுகளை எட்டவில்லையென்றால், கியூபாவுக்கு எதிரான சாத்தியமான இராணுவ நடவடிக்கை குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா? அதைத் தடுப்பதற்கு ஏதேனும் வியூகம் உள்ளதா?

**பதில்:** கியூபா ஒரு போர் நாடு அல்ல. அது ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிக்கும் ஒரு அமைதி நாடு. ஆனால், கியூபா போருக்கு அஞ்சுவதில்லை. எங்களிடம் 'முழு மக்கள் போர்' என்றழைக்கப்படும் ஒரு தற்காப்புக் கோட்பாடு உள்ளது. அது ஆக்கிரமிப்புக் கோட்பாடு அல்ல. மாறாக, முழு மக்களும் பங்கேற்கின்ற ஒரு தற்காப்புக் கோட்பாடாகும்.

நிர்வாக உத்தரவை நியாயப்படுத்துவதற்காகக் கூறப்படுவதைப் போல, கியூபா அமெரிக்காவுககு ஓர் அச்சுறுத்தலாகவோ அல்லது ஒரு "அசாதாரணமான மற்றும் வழக்கத்திற்கு மாறான" அச்சுறுத்தலாகவோ இல்லை. இதை நான் உங்கள் கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக மட்டும் கூறவில்லை. மாறாக, கியூபா தனது வரலாறு முழுவதும் அமெரிக்கா மற்றும் உலகின் பின்னணியில் இதை நிரூபிப்பதாலேயே கூறுகிறேன்.

எனவே, நமது கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வாக இராணுவ ஆக்கிரமிப்பைக் கையாளுவதற்கு அமெரிக்காவுக்கு எந்த சாக்குப்போக்கோ அல்லது காரணமோ இல்லை.

இருப்பினும், தொடர்ந்து, குறிப்பாக சமீபத்தைய மாதங்கள் மற்றும் வாரங்களில் அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரபூர்வப் பிரதிநிதி ஒருவர், கியூபாவுக்கு எதிரான இராணுவ ஆக்கிரமிப்பை அறிவித்து, கியூபப் புரட்சி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதற்கான காலக்கெடுவையும், அவர்கள் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்பு நாம் எவ்வளவு காலம் எதிர்த்து நிற்போம் என்பதற்கான தேதிகளையும் நிர்ணயிக்கும் ஒரு முழுமையான சொல்லாடலை முன்வைத்து வருகிறார்.

மேலும், அந்த அதிபழமைவாத மனப்பான்மைக்கு மிகவும் எடுத்துக்காட்டான, அதனை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டும் ஒரு சொற்றொடர் உண்டு. அது என்னவென்றால், அவர்கள், "கியூபாவுக்கு எதிராக எங்களால் இயன்ற அனைத்து அழுத்தங்களையும் நாங்கள் கொடுத்துள்ளோம்" என்று கூறுவதுதான். இதன் மூலம் ஒரு கொடூரமான முற்றுகை உண்மையில் இருந்தது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால், இப்போது அதை மறுக்கிறார்கள். அதன் பிறகு உடனடியாக, "எனவே, எங்களுக்கு எஞ்சியிருக்கும் ஒரே வழி, கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டு அதைத் தரைமட்டமாக்குவதுதான்" என்றும் கூடுதலாகச் சொல்கிறார்கள்.

இது, அமெரிக்காவுடனான நமது பேச்சுவார்த்தைகளில் நாம் முன்மொழிந்ததிலிருந்து முற்றிலும் மாறுபட்ட, போர்க்குணம் மிக்க மற்றும் ஆக்கிரமிப்பு நிலைப்பாடாகும். எனவே, நாட்டின் பாதுகாப்பிற்குத் தயாராவது நமது பொறுப்பாகும்.

நமது வரலாற்றில் இது முதல் முறையல்ல. 67 ஆண்டுகளாக ஆக்கிரமிப்புக்கான சாத்தியக்கூறும், இராணுவ அச்சுறுத்தலும் எப்போதும் இருந்து வந்துள்ளன.

அதனால்தான் நாம் தற்காப்பிற்குத் தயாராகின்றோம் – தாக்குவதற்காக அல்ல. மேலும், இந்தத் தற்காப்பிற்கான தயாரிப்பும், இந்த உறுதியும், புரட்சியைப் பாதுகாக்கவும், நமது இறையாண்மையைப் பாதுகாக்கவும், நமது சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் மக்கள் காட்டும் இந்த விருப்பமும், மோதலைத் தவிர்க்கவும் உதவும்.

தலைவர்களான எங்களைப் பொறுத்தவரை, புரட்சிக்குள் தலைமைப் பொறுப்புகளை வகிக்கும் எங்களைப் பொறுத்தவரை, எங்கள் அர்ப்பணிப்பு மக்களுக்கும், கியூபப் புரட்சிக்கும், நாட்டின் இறையாண்மைக்கும் சுதந்திரத்திற்கும் உரியதாகும்.

எனவே, புரட்சியின் இருப்புக்காகவும், அதன் இறையாண்மைக்காகவும், அதன் சுதந்திரத்திற்காகவும், எங்கள் உயிரைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்ற உறுதியான நம்பிக்கையை இது குறிக்கிறது. எங்கள் தனிப்பட்ட பாதுகாப்பைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

நாங்கள் எப்போதும் போரைத் தவிர்க்கவே பாடுபடுவோம். நாங்கள் எப்போதும் அமைதிக்காக உழைப்போம். ஆனால், இராணுவ ஆக்கிரமிப்பு ஏற்பட்டால், நாங்கள் பதிலடி கொடுப்போம், போரிடுவோம், எங்களைத் தற்காத்துக் கொள்வோம். போரில் நாங்கள் வீழ்ந்தால், எங்கள் நாட்டிற்காக இறப்பதே வாழ்வதற்குச் சமம்.

எனவே, நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், ஆக்கிரமிப்பைத் தவிர்ப்பதற்கும், நாட்டைப் பாதுகாப்பதற்கும் தயார்படுத்துவதுதான். ஏனெனில், நம் மக்களின் தலைவிதியும், கியூப தேசத்தின் எதிர்காலமும் நமக்கு அக்கறைக்குரிய விடயங்களாகும்.

மேலும், கியூபாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்பது, மிகவும் சங்கடமான ஒரு சூழ்நிலையாக இருப்பதுடன், இரு நாடுகளுக்கும் அவற்றின் மக்களுக்கும் பெரும் இழப்புகளை ஏற்படுத்தும் என்பதை நான், முழு உறுதியுடனும் நேர்மையுடனும் கூற முடியும். அதனால் ஏற்படும் உயிரிழப்பும், பொருள் சேதமும் கணக்கிட முடியாதவையாக இருக்கும். இத்தகைய ஆக்கிரமிப்புச் செயல் எல்லா வகையிலும் மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கும்.

நம் மக்கள் அமைதிக்கும், நட்புறவான சூழலில் வாழ்வதற்கும், ஒத்துழைப்பதற்கும், உண்மையான அண்டை வீட்டு உறவை வளர்த்துக் கொள்வதற்காக முழுச் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கும் தகுதியானவர்கள்



என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இதுதான் உண்மையாகவே ஆக்கபூர்வமானது என்றும், உரையாடல் மூலம் இருதரப்பு வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான சாதியக்கூறு குறித்து இதுவே ஒரு முழுமையான பார்வையை வழங்குகிறது எனவும் நான் நம்புகிறேன்.

**கேள்வி:** இந்த நிர்வாகம் வெளிநாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்திய நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு, உங்கள் சொந்தப் பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் குறித்தோ, அல்லது இந்த நேரத்தில் கியூபா அரசாங்கத்திற்குள் ஒத்துழைப்பாளர்களைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்தோ, உங்களுக்கு கவலை இல்லையா?

**பதில்:** நான் தொடக்கத்தில் கூறியது போல, எனது தனிப்பட்ட பாதுகாப்பு குறித்து எனக்குக் கவலை இல்லை. கியூப அரசின், கட்சியின் மற்றும் புரட்சியின் தலைமை கூட்டுத்தன்மை வாய்ந்தது. மேலும், முடிவுகள் கூட்டாகவே எடுக்கப்படுகின்றன.

நாங்கள் ஒற்றைப்படையான ஒற்றுமை, கருத்தியல் ஒருமைப்பாடு மற்றும் புரட்சிகர ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுகின்றோம். மேலும், மக்களுடன் நெருங்கிய உறவும், அடிப்படைச் செயல்முறைகள் தொடர்பான முடிவெடுப்பதில் மக்கள் பங்கேற்பும் நிலவுகிறது.

எனவே, நாட்டின் பாதுகாப்பும் ஒரு கூட்டு முயற்சியாகும். அதில் செயல்பட்டு, அதைப் பாதுகாக்கும் மக்களே அடிப்படைக் கதாநாயகர்களாக உள்ளனர். இவ்வாறு நிகழும் போது, துரோகம் செய்வது மிகவும் கடினமாகி விடுகிறது. நமது அரசியலமைப்பு ஒழுங்கைச் சீர்குலைக்கும் அல்லது நாட்டின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தும் ஒரு இணை ஒப்பந்தத்தை யாராலும் வெற்றிகரமாக உருவாக்குவது மிகவும் கடினமாகி விடுகிறது. இதன் விளைவாக, அதற்கு இங்கு இடமில்லை என்று நான் நம்புகிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நமது மக்களின் எதிர்த்து நிற்கும் மற்றும் போராடும் திறனைக் கருத்தில் கொண்டு, மற்ற நாடுகளில் நடந்தவற்றுடன் நம்மை ஒப்பிடுவது பொருத்தமானது என்று நான் நம்பவில்லை. அது கியூபப் புரட்சியின் வரலாற்றையும், நமது மக்களின் வரலாற்றையும், நமது நிறுவனங்களின் வலிமையையும், நமது ஒற்றுமையையும் புறக்கணிப்பதாக அமையும்.

**கேள்வி:** நாம் ஏற்கனவெ விவாதித்தபடி, புரட்சி நடந்து 67 ஆண்டுகளுக்கப் பிறகு கியூபாவில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி இன்னமும் ஆட்சியில் நீடிக்கிறது. நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொணடு, இந்தச் சித்தாந்தத்தின் நீடித்த வெற்றியை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்? மேலும், இது கியூப மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கான சிறந்த உத்தரவாதமாகத் தொடர்ந்து இருக்குமா?

**பதில்:** அது மிகவும் சுவாரசியமான கேள்வி. மேலும், மிகக் குறுகிய நேரத்தில் அதற்குப் பதிலளிப்பது மிகவும் கடினம்.

கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சி 67 ஆண்டுகளாக ஆற்றியுள்ள பங்கைக் குறித்து நான் மனநிறைவும் பெருமையும் கொள்கிறேன். இதன் பொருள் நாங்கள் முற்றிலும் அலட்சியமாக இருந்தோம் என்பதல்ல. தொடர்ச்சியான ஆக்கிரமிப்புகள், தடைகள், நிர்ப்பந்த நடவடிக்கைகள், உச்சபட்ச அழுத்தக் கொள்கை, தீவிரப்படுத்தப்பட்ட முற்றுகை, தற்போது எரிசக்தி முற்றுகை ஆகியவற்றுக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும், அந்தக் கட்சியால் நமது சமூகத்தின் வழிகாட்டும் சக்தியாகத் திகழ முடிந்தது. மேலும், அரசாங்கம் மக்களுடன் இணைந்து, நமது புரட்சியின் சோசலிசக் கட்டுமானச் செயல்முறையை வழிநடத்தவும் முடிந்தது.

மேலும், எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும், அந்தச் சூழ்நிலைகளின் கீழும், அந்தக் கட்சியின் தலைமையின் கீழும், கியூபப் புரட்சியானது குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. புரட்சியையும் அதன் சித்தாந்தத்தையும் எதிர்ப்பவர்களால் கூட, அவற்றை நேர்மையாக மதிப்பிட்டால் அந்த முன்னேற்றங்களை மறுக்க முடியாது.

அந்தச் சூழ்நிலைகளில், அந்தக் கட்சியின் தலைமையின் கீழ், ஒரு போராட்டத்தை நடத்தி எழுத்தறிவின்மையை ஒழிக்க முடிந்தது. பல பத்தாண்டுகளுக்குப் பிறகு, “யோ ஸீ புவேடா” (ஓம் என்னால் முடியும்) என்றழைக்கப்படும் கல்வி முறையின் காரணமாக, மேலும் நான்கு இலத்தீன் அமெரிக்க நாடுகள் எழுத்தறிவின்மையை வெற்றிகரமாக ஒழித்தன. இன்று, அந்த முறையானது உலக தென்பகுதியின் பல்வேறு நாடுகளில் உள்ள எண்ணற்ற சமூகங்களிலும் பிராந்தியங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

அந்தப் புரட்சியானது, மிகவும் கடினமான முற்றுகை நிலைகளுக்கு மத்தியிலும், அனைவரையும் சென்றடையும் ஒரு பொதுவான மற்றும் இலவச சுகாதார அமைப்பைச் செயல்படுத்திப் பராமரித்து, அதன் மூலம் கியூப மக்களுக்குச் சிகிச்சை அளிக்கவும், புரட்சிக்கு முன்பு இருந்த நோய்களை ஒழிக்கவும், அனைத்து சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்தவும், நம்மை உலகின் முக்கிய வல்லரசுகளின் நிலைக்கு உயர்த்தவும் வழிவகுத்துள்ளது.

அது மட்டுமல்லாமல், மருத்துவப் பராமரிப்புத் துறையில் நாங்கள் பெருமளவிலான மனித வளத்திற்குப் பயிற்சி அளித்துள்ளோம். இது

உலகெங்கிலும் உள்ள பிற நாடுகளுக்கு ஒற்றுமையின் அடிப்படையில் உதவி வழங்க எங்களுக்கு வழிவகுத்துள்ளது.

தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை, முதுகலை மற்றும் பட்டப்படிப்புகள் உட்பட, அனைவருக்கும் இலவச மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை உறுதி செய்யும் ஒரு கல்வி முறையையும் நாங்கள் கொண்டுள்ளோம்.

நாங்கள் குறிப்பிடத்தக்க மனித வளங்களை உருவாக்கியுள்ளோம். அறிவியலையும் புத்தாக்கத்தையும் எங்களால் ஊக்குவிக்க முடிந்துள்ளது. உயிரித் தொழில்நுட்பம் மற்றும் மருந்துத் தொழில்களில் கியூபாவின் முன்னேற்றங்கள் நன்கு அறியப்பட்டவை. கோவிட் – 19 பெருந்தொற்றின் போது, தங்கள் சொந்தத் தடுப்பூசிகளைத் திறம்படத் தயாரிக்க முடிந்த ஒரு சில நாடுகளில் நாங்களும் ஒன்றாக இருந்தோம்.

விளையாட்டு என்பது அனைத்து குடிமக்களுக்குமான உரிமை. ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியன்சிப் என்பனவற்றில் நாங்கள் பெற்ற விளையாட்டுச் சாதனைகள் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சிறிய நாடாக இருந்த போதிலும், தனிநபர் ஒலிம்பிக் பதக்கங்களின் விகிதத்தில் கியூபா முதலிடத்தில் உள்ளது.

பண்பாடு என்பது மனிதகுலத்தின் பாரம்பரியமாகக் கருதப்படுகிறது. அது நமது அடையாளத்தின் ஒரு பகுதியாகும். மேலும், பண்பாட்டுச் செயல்பாடுகள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் உள்ள உற்பத்தி உள்கட்டமைப்பு ஒரு உருமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டால் ஒரு எண்ணிம மாற்றம் முன்னெடுக்கப்படுகிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை நோக்கிய ஒரு ஆற்றல் மாற்றம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் உள்ள பாதிப்புகளுக்குத் தீர்வு காணும் வகைகளில், 32இற்கும் மேற்பட்ட சமூகத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஆதரவு வழங்கப்படுகிறது.

சமூக நீதி, சமத்துவம் மற்றும் பங்கேற்பு ஆகியவை அடையப்பட்டுள்ளன. நம்மால் ஒற்றுமையை வழங்க முடிந்துள்ளது. சர்வதேச சமூகத்துடன் விரிவான பரிமாற்றத்தைப் பேணுவதற்கு வழிவகுக்கும் ஒரு சர்வதேச உறவுகள் அமைப்பு எம்மிடம் உள்ளது.

இந்தக் காரணங்களுக்காகவும், இன்னும் பல காரணங்களுக்காகவும், உலகின் மக்கள் தொகையின் பல பிரிவினரிடையே கியூபா மீது ஒருவகைப் போற்றுதல் உணர்வு உருவாகியுள்ளது. அத்துடன், கட்சியின் பணிகளுக்கும், புரட்சியின் சாதனைகளுக்கும், அதன் முக்கிய கதாநாயகர்களாக விளங்கிய கியூப மக்களின் வீரத்திற்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஏனெனில், கட்சியின் உறுப்பினர்களும், அதன் தலைமையும் கியூப மக்களின் ஒரு பகுதியினராக இருப்பதுடன், புரட்சியின் பணிகளும் அந்த மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், சாதிக்கப்பட்டவை குறித்து எங்களுக்குச் சிறிதும் தற்பெருமை இல்லை. உண்மையில், இந்தக் கடினமான சூழ்நிலைகளில் இத்தனை ஆண்டுகளாக கட்சி ஆற்றிய பணிகள் குறித்து நான் வெளிப்படுத்தும் திருப்தியானது, புரட்சியின் சாதனைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, எல்லாவற்றுக்கும் மேலாக, இத்தகைய சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் புரட்சியை உயிர்ப்புடன் வைத்திருக்க முடிந்ததையே அடிப்படையாகக் கொண்டது.

இருப்பினும், ஒரு தேசமாக நாம் கனவு கண்ட மற்றும் கற்பனை செய்த அனைத்தையும் இன்னமும் அடையாததால், நம்மால் முழுமையாகத் திருப்தியடைய முடியாமல் இருப்பது இயல்பே. நாம் வெல்ல வேண்டிய, செம்மைப்படுத்த வேண்டிய மற்றும் முன்னேற வேண்டிய விடயங்கள் உள்ளன. இந்தத் துறைகளில்தான் முற்றுகையானது நம்மைப் பாதிப்பதிலும், பின்னுக்குத் தள்ளுவதிலும் ஒரு அடிப்படைப் பங்கை வகிக்கிறது.

வாழ்க்கையின் எண்ணற்ற இழப்புகளும் சிரமங்களும் நிறைந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையைக் குறித்து நாம் அலட்சியமாக இருக்க முடியாது என்ற ஒரு பரிதல் உள்ளது. திருப்திக்கும் அலட்சியத்திற்கும் இடையிலான தொடர்பு அதில்தான் அடங்கியுள்ளது.

ஒருபுறம், அனைவருக்கும் பொதுவான, இலவசமான மற்றும் உயர்தரமான சுகாதார அமைப்பைச் செயல்படுத்துவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இருப்பினும், இன்று இந்த சுகாதார சேவைத்திறன்கள் இருந்தபோதிலும், 11,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட, 90,000 இற்கும் மேற்பட்ட கியூபர்கள் அறுவைச் சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

அது வேதனையளிக்கிறது. ஏனென்றால் அதைச் செய்வதற்கான ஆற்றல் எம்மிடம் உள்ளது. ஆனால் இந்த முற்றுகையானது, அந்தப் பெரிய அளவிலான நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தேவையான பொருட்களைப் பெறுவதையும், ஆற்றலைக் கொண்டிருப்பதையும் தடுக்கிறது.

செய்யப்பட்ட தவறுகளையோ அல்லது மேற்கொள்ளப்பட்ட சுயவிமர்சனப் பகுப்பாய்வுகளையோ குறித்து நாங்கள் அலட்சியமாக இல்லை. மேலும், புரட்சியாளர்கள் எப்போதும் பரிபூரணத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், ஒருங்கிணைப்பிற்காகவும், மேம்பாட்டிற்காகவும் பாடுபடுவதால், நாங்கள் அலட்சியமாக இல்லை.

ஆனால், கியூபப் புரட்சியின் சாதனைகளால் கட்சி காலத்தின் சோதனைகளைத் தாங்கி நின்றதால், ஆம், நான் பெருமையையும் மனநிறைவையும் உணர்கிறேன் என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

ஒவ்வொரு நாளும் இடர்களை எதிர்கொண்டு, அவற்றை எதிர்கொள்வதோடு மட்டுமல்லாமல், அந்தச் சூழலுக்கேற்ப தங்களை உயர்த்திக் கொள்ளும் அந்த வீரர்களுக்கு இது அளவற்ற பெருமைக்கும் ஆழ்ந்த மரியாதைக்கும் உரிய விடயம் என்று நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

**கேள்வி:** இந்தச் சாதகமற்ற சூழ்நிலைகளில், கியூபா யதார்த்தமாக எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? மேலும், தங்கள் நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கான ஒரு வாய்ப்பாகக் கருதும் பல கியூப – அமெரிக்கர்கள் உட்பட பல எதிர்ப்பாளர்களுக்கு உங்கள் செய்தி என்ன?

**பதில்:** ஊடக கையாளுதல்களும் மிகுந்த அழுத்தமும் உள்ளன. நாம் ஒரு

சித்தாந்த, கலாச்சார மற்றும் ஊடகப் போரை எதிர் கொள்கிறோம். மிகப்பெரிய ஊடக நஞ்சூட்டல் நடைபெறுகிறது. குறிப்பாக, சமூக ஊடகங்களில் மிகுந்த வெறுப்பு விதைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நமது மக்களும் நிறுவனங்களும் மேற்கொண்டு, கட்சியால் வழிநடத்தப்படும் திறனாய்வு மற்றும் சுயவிமர்சனப் பகுப்பாய்வில் வேரூன்றிய இடைவிடாத உருமாற்றத் தருணங்களைக் கடந்து, சமூக நீதிக்கான தேடலை எப்போதும் உந்துதலாகக் கொண்டு, நமது சோசலிசக் கட்டுமானச் செயல்முறையின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான நமது அர்ப்பணிப்பை நாம் தொடர்ந்து பேணி, கனவு கண்டு போராடி வருகிறோம்.

மேலும், பெரும்பாலும் இந்த மாற்றங்கள் அமெரிக்காவில் அறியப்படாமலோ, மறுக்கப்படாமலோ அல்லது அறிக்கையிடப்படாமலோ இருக்கின்றன.

ஆனால், உதாரணமாக, மையப்படுத்தலுக்கும் பரவலாக்கத்திற்கும் இடையே சரியான சம நிலையையும், திட்டமிடலுக்கும் சந்தைக்குமிடையே சரியான சமநிலையையும் அடைவதற்காக, தற்சமயம் நாங்கள் பொருளாதார மேலாண்மை அமைப்பில் மாற்றங்களைச் செய்து வருகிறோம்.

அரசின் நிர்வாக, வணிக மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளை முழுமையாக மறுசீரமைக்க நாங்கள் முன்மொழிகிறோம். அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவன அமைப்புக்கு அதிக சுயாட்சியை நாங்கள் பரிந்துரைக்கிறோம். பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையே பொருளாதாரக் கூட்டணிகளை உருவாக்க வழிவகுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒப்புதல்கள் அளித்துள்ளோம்.

சமீபத்தைய ஆண்டுகளில் நமது பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்களிப்பும் வளர்ச்சியும் கணிசமாக விரிவடைந்துள்ளது.

நாங்கள் நகராட்சிகளின் தன்னாட்சியை வலுப்படுத்துவதோடு,அவற்றின் திறன்களைப் பயன்படுத்துவதன் அடிப்படையில், அவற்றின் செழிப்பை அதிகரிக்கக்கூடிய உள்ளூர் உற்பத்தி அமைப்புகளையும் உருவாக்கி வருகிறோம்.

கியூபாவில் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான விதிமுறைகளை நாங்கள் புதுப்பித்து, மேலும் நெகிழ்வுத்தன்மை உடையதாக மாற்றியுள்ளோம். வெளிநாட்டு நாணயத்தில் மூடிய நிதி வழங்கும் வழிமுறைகளை நாங்கள் ஊக்குவித்து வருகின்றோம். எங்கள் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் கியூபர்களின் பங்கேற்பிற்காக நாங்கள் புதிய வழிகளைத் திறந்துள்ளோம்.

பொருளாதாரத்தில் அரசு மற்றும் அரசுசாரா துறைகளுக்கு இடையே இருக்க வேண்டிய உறவுகளை நாங்கள் செம்மைப்படுத்தி வருகின்றோம்.

நாங்கள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கிய ஒரு ஆழமான எரிசக்தி மாற்றத்தை முன்னெடுத்து வருகிறோம். உணவு இறையாண்மையை அடைவதற்காக நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரித்து வருகிறோம். மேலும், பிற நாடுகளுடனான ஒற்றுமை, கூட்டு முயற்சி மற்றும் ஒத்துழைப்பைப் புறக்கணிக்காமல், பாதிப்புகளை எவ்வாறு கையாள்வது, தற்போதுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளை எவ்வாறு குறைத்துத் தணிப்பது என்பதில் எப்போதும் கவனம் செலுத்தி, எங்கள் வங்கி மற்றும் நிதி அமைப்பை மேம்படுத்தி வருகின்றோம்.

நாங்கள் இவை அனைத்திலும் ஈடுபட்டுள்ளோம். இவை அனைத்தையும் கனவு காண்கின்றோம். மேலும், இவை அனைத்திலும் மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்தப் பாடுபடுகிறோம். அதை எங்களால் சாதிக்க முடியும் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

எங்களுக்குத் தேவையானது எங்களைத் தனியாக விட்டுவிடுவதுதான். நான் எப்போதும் யோசிப்பதுண்டு, கியூபாவின் பொருளாதாரம் பலவீனமானது என்றும், நாங்கள் திறமையற்றவர்கள் என்றும், எங்கள் செயல்முறை மோசமானது என்றும் அமெரிக்கா நம்பினால், ஏன் 67 ஆண்டுகளாக வரி செலுத்துவோரின் மில்லியன் கணக்கான டொலர்களைச் செலவழித்து எங்களைத் தடுக்கவும், சீர்குலைக்கவும், தாக்கவுமே அது தொடர்ந்து முயன்று வருகிறது? நாங்கள் அவ்வளவு திறமையற்றவர்கள் என்றால், அவர்கள் ஏன் எங்களை எங்கள் போக்கில் தோல்வியடைய விடுவதில்லை?

அல்லது, முற்றுகையின் கீழ் இருந்தபோதிலும், நாம் சாதித்த அனைத்தையும் ஒரு தொடக்கப்புள்ளியாகக் கொண்டு, முற்றுகை இல்லாமல் இருந்திருந்தால் என்னவெல்லாம் செய்ய முடியும், சாதிக்க முடியும் என்ற உதாரணத்தைக் கண்டு அவர்கள் அஞ்சுகிறார்களா?

மக்கள் தொகையில் 80 சதவீதத்திற்கும் அதிகமானோர் புரட்சிக்குப் பிறகு பிறந்த ஒரு நாட்டில் இதுதான் உணர்வு. என் தலைமுறை முற்றுகையின் கீழ் பிறந்தது, எங்கள் பிள்ளைகள் முற்றுகையின் கீழ் பிறந்தனர், எங்கள் பேரப்பிள்ளைகள் முற்றுகையின் கீழ் பிறந்தனர், மேலும், நாங்கள் அனைவரும் அந்த முற்றுகையின் கீழ் தொடர்ந்து வாழ்ந்து வருகிறோம்.

கியூபா தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தினால் எப்படி இருக்கும்? மேலும், இந்த முற்றுகை மட்டும் இல்லாதிருந்தால், அது உலகின் பிற பகுதிகளுக்கு எவ்வளவு பங்களித்திருக்கும்?

ஒரு நிகழ்வு. தாமததிற்கு மன்னிக்கவும். இந்த வாரம் முழுவதும் நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில், அறிவியல் மற்றும் புத்தாக்கத் துறைகளில் உள்ள குறிப்பிட்ட தலைப்புகளைப் பற்றி விவாதிப்பதற்காக நான் கியூப விஞ்ஞானிகளுடன் ஒரு கருத்தரங்கில் பங்கேற்று வருகின்றேன்.

சமீபத்தில், அல்மைசர் நோயை எதிர்த்துப் போராடுவதற்காக உருவாக்கப்பட்டு வரும் மருந்து ஒன்றின் முடிவுகளை விஞ்ஞானிகள் குழு ஒன்று சமர்ப்பித்தது. இந்த மருத்துவப் பரிசோதனையின் ஒரு பகுதி, கொலராடோவில் உள்ள ஒரு மருத்துவமனையில் அமெரிக்க நோயாளிகளுடன் நடத்தப்பட்டது. சமூக ஊடகங்களில் பரவி வரும் அதன் காணொளியை நீங்கள் பார்க்கலாம். மேலும், அந்த மருந்தினால் தனது நோயாளிகள் பெற்ற பலன்கள் குறித்து மருத்துவமனையின் இயக்குநர் கூறுவதையும் கேட்லாம்.

இதன் முடிவுகள் அனைத்து பாரம்பரிய மருந்துகளின் முடிவை விடவும் மேலானவை. கியூபாவால் உருவாக்கப்பட்ட இந்தப் புத்தாக்கத்தின் ஆற்றலையும், முற்றுகையால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல், இந்தப் பணியை மேலும் ஒத்துழைப்புடனும் பரந்த அளவிலும் ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தையும் இது அங்கீகரிக்கிறது. உண்மையில், இது முற்றுகையைக் கண்டிக்கிறது.

அதுதான் நாங்கள் நம்பி இருக்கும் எதிர்காலம். நாங்கள் விரும்பும் எதிர்காலம். மேலும், அதை நம்மால் நிச்சயமாக அடைய முடியும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

# எண்ணெய் நெருக்கடி

('களனி' காலாண்டு சஞ்சிகையின் 1974 சித்திரை - ஆனி இதழில் இந்தக் கட்டுரை வெளிவந்தது. இன்றைய மத்திய கிழக்கு நிலைமையை கட்டுரையாளர் சுமார் 52 வருடங்களுக்கு முன்பே உய்த்துணர்ந்துள்ளார் என்பதை இக்கட்டுரையை வாசிக்கும் போது புரிந்து கொள்ளலாம்)



கலாநிதி சி.சிவசேகரம்

பெற்றோலிய எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு முழு முதலாளித்துவ உலகையும் உலுக்கும் போது, ஏகாதிபத்தியத்தின் பிடியில் திணறும் நாடுகளில் ஒன்றான இலங்கை குலுக்கப்படுவதில் என்ன அதிசயம் இருக்கிறது? இன்றைய எண்ணெய் அரசியல் நமக்குப் பல பாடங்களைப் புகட்டுகிறது. இவற்றையும், எண்ணெய் விலை பற்றி வழங்கி வரும் சில கருத்துக்களையும் இங்கு கவனிப்போம்.

நமது பிரதான உற்பத்தியான தேயிலையின் விலை, ஏகாதிபத்தியத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. சந்தை விதிகள் காரணமாக அதன் விலை ஏகாதிபத்திய நாடுகளது உற்பத்திப் பொருட்களின் விலையுடன் ஒப்பிடுகையில் அதி வேகமாக வீழ்கிறது. ஏகாதிபத்திய நாடுகள் அத்தியாவசியமற்ற பொருளான தேயிலை விலையை மட்டுமல்லாமல், அவசிய பொருட்களான செம்பு போன்றவற்றின் விலைகளைக் கூட, சர்வதேசிய அரசியல் பகடைகளாகப் பயன்படுத்தியமை சாம்பியா, சிலி நாடுகளுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் தெளிவாகும்.

உலகச் சந்தையில் விலைவாசிகள் மட்டுமின்றி, நேரடியான இராணுவ - அரசியல் தலையீடுகள் மூலமும் ஏகாதிபத்தியம் ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளை மிரட்டிச் சுரண்டவும் முடிந்தது. இதே சுரண்டல் முறை மூலம் தமது பொருளாதார தொழில் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான எண்ணெயை மலிவு விலையில் வாங்கி அதன் துணை கொண்டு தமது நாடுகளில் உற்பத்தி, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மிக உயர்ந்த நிலையில் வைத்திருந்தனர்.

எண்ணெய் எவ்வளவு மலிவான விலையில் கிடைத்ததென்றால், அமெரிக்காவில் எண்ணெய்க்குத் தோண்டுவதற்கான செலவில் ஒரு சிறு தொகையில் அதை அரபு நாடுகளில் பெறலாம் எனும்படி இருந்தது. இந்த எண்ணெய் ஏற்றுமதியின் பெரும்பகுதி முக்கியமாக அரபு நாடுகளிடமிருந்தும், ஈரான், இந்தோனேசியா போன்ற ஆசிய நாடுகளிலும், வெனிசுவேலா போன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும், நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகளிலும் இருந்தே நடைபெற்றது.

அமெரிக்காவிடமும் சோவியத் யூனியனிடமும் பெருமளவு எண்ணெய் இயற்கையாகவே இருந்தபோதும், அவை எண்ணெயை வாங்குவதில் காட்டிய நாட்டம், இந்த எண்ணெயை வாங்குவது எவ்வளவு இலாபகரமானது என்பதை ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது.

ஏகாதிபத்திய நாடுகள் நீண்ட காலமாக எண்ணெய் உற்பத்தியின் அளவைத் தீர்மானிக்கவும், அதன் மூலம் அதன் விலையைக் கட்டுப்படுத்தவும் வல்லனவாயிருந்தன. இது மட்டுமின்றி, எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிடையே, குறிப்பாக அரபு நாடுகளிடையே, பகைமையை மூட்டியும், இதற்கும் மேலாக, இஸ்ரேலைப் பயன்படுத்தி மிரட்டியும், அந்த நாடுகளின் அரசியலில் நேரடியாகத் தலையிட்டும், ஏகாதிபத்தியம் அவற்றைக் கட்டுப்படுத்தி வந்தது.

அரபு நாடுகளின் குறிப்பிடத்தக்க ஒரே இயற்கை வளம் எண்ணெயாக இருந்ததால், அவற்றால் சுயாதீனமாக இயங்குவது கடினமாக இருந்தது. ஆயினும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னான தேசிய சுதந்திர உணர்வுகள், 1950 சொச்சங்களின் பிற்பகுதியில் சர்வதேச ரீதியான ஏகாதிபத்திய விரோத உணர்வாகப் பெருமளவில் உருவம் பெற்றன.

சூயெஸ் கால்வாய் தேசியமயம் எகிப்தை முற்றாக ஏகாதிபத்திய விரோத முகாமிற்குள் தள்ளியது. லெபனானில் 1957 இல் அமெரிக்கத் தலையீடும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீது அரபு மக்களின் வெறுப்பை அதிகரித்தது. 1967 இல் அரபு நாடுகள் மீது இஸ்ரேலிய தாக்குதலும், அரபு பிரதேசங்களைக் கைப்பற்றியமையும், அரபு நாடுகளிடையே ஒரு புதிய ஒற்றுமைக்கு வழிவகுத்தது. இது 1973 யுத்தத்தால் மேலும் உறுதியடைந்தது.

1973 இன் பிற்பகுதியில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் 'சக்தி நெருக்கடி' ஏற்பட்டது. அதாவது, அந்த நாடுகளின் உற்பத்தியின் வளர்ச்சி வேகத்திற்கேற்றவாறு எரிபொருள், குறிப்பாக எண்ணெய் கிடைப்பதில் கஸ்டம் ஏற்பட்டது.

முதல் தடவையாக எண்ணெய்க்குத் தட்டுப்பாடு தோன்றியது. மலிவு எண்ணெய் பெற்ற பொருளாதாரம், அதே எண்ணெய் இல்லாமல் இயங்கத் திணறும் நிலை ஏற்பட்டது. இஸ்ரேல் மூலம் அரபு நாடுகளை மிரட்டிய நிலை அரபு நாடுகளது புதிய ஒற்றுமைக்கு வழிவகுத்தது. ஏகாதிபத்தியம் அரபு மக்களுக்கெதிராகப் பயன்படுத்திய அரசியல் ஆயுதமும் அதற்கெதிராகவே திரும்பின.

இந்த நிலையில், 1973 யுத்தத்தைப் பயன்படுத்தி அரபு நாடுகள் தமது ஒற்றுமை மூலமும், எண்ணெய் தட்டுப்பாடு காரணமாகவும், முதன் முறையாக எண்ணெய் விலையைத் தாமே நிர்ணயிக்கும் நிலைக்கு வந்ததுடன், எண்ணெயை யாருக்கு

விற்பது எனவும் முடிவு செய்யத் துணிவு கொண்டன. இந்த நிலையில் அரபு நாடுகளுக்கெதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம் பயன்படுத்தி வந்த ஈரான் அரசாங்கம் கூட அரபு நாடுகளுடன் ஒன்றுபட்டு நின்றது.

இதே ஏகாதிபத்திய விரோதப் போக்கைப் பிரதிபலித்து, எண்ணெய் ஏற்றுமதி செய்யும் பிற நாடுகளும் அரபு நாடுகளுக்குக் கழுத்தறுக்க மறுத்தன. அமெரிக்கா அரபு நாடுகள் மீது ஆயுதப் படையெடுப்பு மிரட்டலைப் பயன்படுத்தியது. இது அவற்றைப் பயமுறுத்துவதற்குப் பதிலாக மேலும் துணிவு கொள்ளச் செய்து, அமெரிக்கா “நம்மைத் தாக்கினால் எண்ணெய் கிணறுகளில் தீ மூளும்” எனவும் கூறத் தூண்டியது.

இன்றைய எண்ணெய் விலையுயர்வும், தட்டுப்பாடும், மேலை நாடுகளின் உற்பத்தி, வாழ்க்கைத்தரம், பொருளாதாரம் எல்லாவற்றையுமே நிலைகுலைத்துவிட்டது. நேற்றுவரை உச்சாணிக் கிளையில் நின்ற ஜப்பானும், சுவிற்சலாந்தும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. இதன் எதிர்கால விளைவுகள் என்னவாயிருக்கும் எனக் கவனிப்போம்.

இந்த நெருக்கடி மேலை ஏகாதிபத்திய நாடுகளிடையே அமெரிக்காவை ஓரளவு குறைவாகவே தாக்கியுள்ளதால், ஜப்பான், ஜேர்மனி ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், வீழ்ந்து கொண்டிருந்த அமெரிக்கப் பொருளாதாரம் இன்று பிற மேலை நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்ந்துள்ளது எனலாம்.

இதனால் அமெரிக்காவில் நெருக்கடி இல்லை என்று அர்த்தமில்லை. அத்துடன், இந்த நிலை நிரந்தரமானதும் இல்லை. இந்த நெருக்கடி முழு ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளையும் தாக்கியே தீரும். இது ஒருபுறமிருக்க, புதிய எண்ணெய் விலைகளின் காரணமாக, ஏற்கெனவே சில அரபு நாடுகளிடம் எண்ணெய் விற்பனை காரணமாகத் திரண்டுள்ள அந்நியச் செலாவணித் தொகை இன்னும் பத்தாண்டுகளில் முதலாளித்துவ வளர்ச்சி அடைந்த நாடுகளின் நிதியின் பெரும் பகுதியாகி விடும்.

இதன் அரசியல் தாக்கங்கள் பாரதூரமானதாயிருக்கும். எனவே, இது புதிய உலக நெருக்கடிகளுக்கும், யுத்தங்களுக்கும் வழிகோல இடமுண்டு. அதே சமயம், இது மேலை முதலாளித்துவ அமைப்பையே மாற்றவும் வழிகோலக்கூடும். எதுவானபோதும், அண்மையில் உள்ள எதிர்காலம் உலகில் அமைதியைக் குறிப்பதாய் இருக்காது.

அரபு நாடுகளின் நண்பனாகக் கருதப்படும் சோவியத் யூனியனின் நடத்தை நம் கவனத்துக்குரியது. சோவியத் யூனியன் எண்ணெய் விலையை உயர்த்துமாறு அரபு நாடுகளுக்கு ஆலோசனை கூறியதாகக் கருதப்படுகிறது. இது உண்மையோ பொய்யோ எதுவானாலும், அண்மையில் தான் விற்பனை செய்த ஆயுதங்களுக்குப் பதிலாக, 5 வருட ஒப்பந்தத்தின் பேரில் ஈராக்கிடமிருந்து (விலை அதிகரிப்புக்கு முன்) ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்து விலையில் எண்ணெயை வாங்கும் ஏற்பாட்டைச் செய்துள்ளது.

இதே எண்ணெயை அது மேற்கு ஜேர்மனிக்கு (அரபு நாடுகள் இஸ்ரேலுடன் யுத்தத்தை முன்னிட்டு எண்ணெய் விலையையும் உற்பத்தியையும் கட்டுப்படுத்தியிருந்த நேரத்தில்) நான்கு மடங்கு விலைக்கு விற்றதுடன், தன் மட்டரக எண்ணெயை கிழக்கு ஐரோப்பிய ‘நண்பர்களுக்கு’ விற்றுவிட்டு, இதைத் தன் பாவனைக்கு எடுத்துக் கொண்டது. இதுதான் நட்பு என்றால், இத்தகைய நண்பர்களை விட எதிரிகள் இனியவர்கள் அல்லவா?

அரபு நாடுகள் எண்ணெய்க்கு கோரும் விலை நியாயமானதா? எனும் கேள்வி சிலரால் எழுப்பப்படுகிறது. முதலாவதாக, அரபு நாடுகள் இந்த விலையை பிற எரிபொருட்களுடன் ஒப்பிட்டு அதன் அடிப்படையிலேயே நிர்ணயித்தன. மறுபுறம், இந்த எண்ணெய் இன்னும் இருபது முதல் ஐம்பது ஆண்டுகளுக்குள் முடிவடைந்து, எண்ணெய் கிணறுகள் வற்றிய பின்பு, அரபு நாடுகள் ஏற்றுமதி செய்வதற்கு எதுவும் இராது.


அவர்கள் அதற்கு இடையில் இந்த எண்ணெய் விற்பனை மூலம் வரும் நிதியைப் பயன்படுத்தித்தான், தமது நாடுகளை வளப்படுத்த வேண்டும். இந்த விலை நியாய, அநியாயங்களைப் பற்றிப் பேசுபவர்கள், அரபு மக்களுக்கு விற்கப்படும் ஆயுதங்கள் நியாய விலையில் விற்கப்படுகின்றனவா என்று கேட்டால் அது மிகவும் நியாயமானதாக இருக்கும்.

இலங்கையின் மீது எண்ணெய் விலையுயர்வின் தாக்கம் மிகவும் பாரதூரமானதாகக் கருதப்படுகிறது. மலிவு விலையில் நாம் எண்ணெயைப் பெற வேண்டும் எனும் கருத்தும் பரவலாக நிலவுகிறது. இது அரபு மக்களைச் சுரண்ட நாம் நண்பர்கள் என்ற முறையில் உரிமை கொண்டாடுவதாகும்.

நாம் அளவு மீறி எண்ணெய் எரிபொருளை உற்பத்திக்கு அவசியமற்ற முறைகளில் செலவிடுகிறோமா இல்லையா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கட்டாயமாக ஏற்பட்டுள்ள எண்ணெய் சிக்கனம் இந்த நாட்டுக்குப் பல வகைகளிலும் நன்மை தருமாறு நாம் இச்சிக்கலைப் பயன்படுத்த இடமுண்டு.

இந்த எண்ணெய் நெருக்கடி, உற்பத்தியுடன் உறவற்ற நகரவாசிகளான நமது உயர், நடுத்தர வகுப்புக் கனவான்களை வானத்தினின்று பூமிக்கு இறக்கியிருப்பதும், நமது நாட்டின் அவசியமற்ற பாவனைகளையும், அளவு மீறிய இயந்திரப் பிரயோகத்தையும் குறைக்க நிர்பந்தித்திருப்பதும் மிக நல்ல அம்சங்களே.

இதற்கு மேலாக, நமது நாடும் நமது ஏற்றுமதி உற்பத்திப் பொருட்கள் விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளுக்கு அரபு நாடுகளது செயல் ஒரு நல்ல வழிகாட்டியாக உதவும் என எதிர்பார்ப்போமாக.



**இ**லங்கையின் மிகவும் மதிக்கப்படும் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான டி.பி.எஸ்.ஜெயராஜ் தனது 72 வயதில் 17.05.2026 அன்று கனடாவில் காலமானார். இவர் 5 தசாப்தங்களாக இலங்கையின் அரசியல், இன மோதல்கள் மற்றும் சமகால நிலவரங்கள் குறித்த விரிவான பத்திகள் மற்றும் தகவல் கட்டுரைகளுக்காக தமிழ், ஆங்கிலத்தில் பரவலாக அறியப்பட்டவர்.

1977 இல் ஒரு நிருபராக வீரகேசரி பத்திரிகையில் காலடி எடுத்து வைத்த டி.பி.எஸ், 1981 இல் The Island ஆங்கில பத்திரிகைக்கு சென்றார். பின்னர் Daily Mirror குழுமம் மற்றும் பிரபல இந்திய ஊடகங்களான, The Hindu, Frontline மற்றும் India Today ஆகியவற்றிற்கும் பங்களித்தார். ‘வானவில்’ இதழிலும் இவரது கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.

சகலராலும் மிதவாத, நடுநிலைப் பத்திரிகையாளர் என மதிக்கப்படும் டி.பி.எஸ்.ஜெயராஜிற்கு ‘வானவில்’ தனது அஞ்சலியைத் தெரிவிக்கின்றது.

# ஈரானின் ஏவுகணை சக்தியின் இரகசியம்!



பெயருக்குக்கூட விமானப்படை இல்லாத ஈரானை தங்கள் வான்படையால் நசுக்கிவிடலாம் என, அமெரிக்காவும் இஸ்ரேலும் கருதிய வேளையில், ஈரான் தனது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான சக்தியைப் பயன்படுத்தி, உலகை வியப்பிலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் மேற்கொண்ட ஈரானுக்கு எதிரான தாக்குதல்கள், ஈரான் வலுவான பதிலடியைத் தருவதற்கே வழிவகுத்துள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானின் (இல்லாத) அணு ஆயுதத் திட்டம் என்ற முக்கியத்துவம் குறைந்த ஒரு விடயத்தில் கவனம் செலுத்திய நேரத்தில், சமச்சீரற்ற போரை எதிர் கொள்வதற்காக ஈரான் ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்தியது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலால் கவனிக்கப்படாமலோ அல்லது சரியாக மதிப்பிடப்படாமலோ இருக்கையில், ஈரான் வழக்கமான இராணுவங்கள் சிந்தித்துத் திட்டமிடாத புதுமையான கொள்முதல், உற்பத்தி மற்றும் இருப்பிட நுட்பங்களைக் கொண்டு, பல தசாப்தங்களாக ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானப் போருக்குத் தன்னைத் தயார்படுத்தி வந்தது.

ஈரானின் ஏவுகணைக் கிடங்கு பூமிக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்பது மட்டுமே அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் தெரிந்திருந்தது. ஆனால், அந்த ஆயுதக் கிடங்கு எவ்வாறு கட்டமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தது என்பது அவைகளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஈரானியர்கள் தங்களது பாலிஸ்டிக் ஏவுகணைகளை சுலபமாகக் கொண்டு செல்லவும், பொருத்தவும் கூடிய வகையில் சிறிய பாகங்களாக உருவாக்கினர். யூன் 2025 இல் நடந்த 12 நாள் போருக்குப் பின்னர்தான் ஈரானியர்கள் தமது பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டத்தைப் புதுப்பித்திருப்பதை இஸ்ரேலியர்கள் அறிந்து கொண்டனர்.

வளி உயர் அடுக்குகளுக்கு வளைந்த பாதையில் பயணித்து, பின்னர் புவியீர்ப்பு விசையைப் பயன்படுத்தி ஒலியின் வேகத்தை விடப் பல மடங்கு வேகத்தை அடையும் பல்வேறு வகையான பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஈரான் உருவாக்கியிருப்பதைக் கண்டு இஸ்ரேலியர்கள் அதிர்ச்சி அடைந்தனர் என்று, 'தி நியுயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் ஜோன் இஸ்மே சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஈரானின் மிக நீண்ட தூரம் செல்லக்கூடிய பாலிஸ்டிக் ஏவுகணையால் சுமார் 1200 மைல்கள் தூரத்தில் உள்ள இலக்குகளைக்கூடத் தாக்க முடியும். 2019ஆம் ஆண்டில் ஈரான், "மத்திய கிழக்கிலேயே மிகப்பெரிய மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பாலிஸ்டிக் ஏவுகணைகளைக் கொண்டுள்ளது" என, உளவுத்துறை முகவரகம் கூறியது.

**பி. கே. பாலச்சந்திரன்**
**(P.K.Balachandran Nair)**

சுமார் 30 முதல் 190 மைல்கள் வரையான தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய "அண்மைத் தாக்குதல்" ஏவுகணைகள், 190 முதல் 620 மைல்கள் வரை பயணிக்கக்கூடிய "குறுகிய தூர" ஏவுகணைகள், சுமார் 1240 மைல்கள் வரை செல்லக்கூடிய "நடுத்தர தூர" ஏவுகணைகள் என, ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணைகள் என ஈரானின் ஏவுகணை களஞ்சியம் இருந்தது என, இஸ்மாயி என்பவர் கூறியிருக்கிறார்.

சக்தி வாய்ந்த குண்டுகளால் ஈரானின் ஏவுகணைத் திறனில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை அமெரிக்கர்களும் இஸ்ரேலியர்களும் உணர்ந்தனர். எனவே, சிறப்பு படைகளைக் கொண்டு தரைவழிப் படையெடுப்பு நடத்துவது ஈரானியர்களை சரணடைய நிர்ப்பந்திக்கும் என அவர்கள் எண்ணினர். ஆனால், அது மிகப்பெரிய மனித உயிரிழப்புகளுக்கு வழிவகுக்கும் என்பதால், ஏனைய சக்திகளின் ஆதரவுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற மாற்று வழி பரிசீலிக்கப்பட்டது.

பாகிஸ்தான், துருக்கி மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகள் அமெரிக்காவுக்கு உதவிக்கரம் நீட்ட, அமைதியான முறையில் ஒரு முடிவை எட்டுவதற்கான முயற்சி தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால், ஈரான் மற்றும் அமெரிக்கா – இஸ்ரேல் என்பன விதித்துள்ள முன்நிபந்தனைகள் இரு தரப்பினருக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதை ஏறக்குறைய சாத்தியமற்றதாக்குகின்றன. இரு தரப்பினரும் தமது நிபந்தனைகளைத் தளர்த்திக் கொள்ளும் நிலையில் இல்லை.

ஈரான் தனது இருப்பே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாலும், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அகந்தையும், இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் உணர்வும் சமரசம் செய்துகொள்ள அனுமதிக்காததாலும், அவ்வாறு செய்ய இயலாது. எனவே, அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானை தொடர்ந்து தாக்கி, அதன் கார்க் தீவை கைப்பற்ற முயற்சிக்கும் அதே வேளையில், ஈரானும் தனது ஏவுகணை உற்பத்தியையும், பதில் தாக்குதல் திறன்களையும் அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் உற்பத்தி மற்றும் சேமிப்பு அமைப்புகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. ஈரான் தனது ஆயுதங்களில் 90 சதவீதமானவற்றைத் தானே உற்பத்தி செய்கிறது. பல தசாப்தங்களாக விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக, அது "தகவமைப்பு கண்டுபிடிப்பு" கலையில் தேர்ச்சி பெற்றுள்ளது.

2. அமெரிக்காவின் கூற்றுப்படி, ஈரான் மேற்கத்தைய மற்றும் சோவியத் உபகரணங்களின் உள்ளூர் நகல்களை உருவாக்க, “நிறுவன உளவு மற்றும் அறிவுசார் திருட்டை” பயன்படுத்துகிறது.
3. அதன் புகழ்பெற்ற ‘ஸாஹெட்’ ட்ரோன்களுக்கு, கண்காணிக்கவோ அல்லது தடை செய்யவோ கடினமான, உடனடியாகக் கிடைக்கும் வணிகக் கூறுகளை ஈரான் பயன்படுத்துகிறது.
4. வான்வழித் தாக்குதல்களில் இருந்து உற்பத்தியைப் பாதுகாக்க, ஈரான் பரந்த நிலத்தடி “ஏவுகணை நகரங்களை” கட்டியுள்ளது. இந்த வசதிகள் மலைகளில் ஆழமாக அமைக்கப்பட்டு, கொங்கிரீட்டால் வலுப்படுத்தப்பட்டுள்ளன.
5. சில வசதிகள் தீவிர மோதலின் போதும் ஆயுதக் கிடங்குகள் தொடர்ந்து செயல்படுவதை உறுதி செய்யும் வகையில், ஏவுகணைகளை மறைவான ஏவுதளங்களுக்கு விரைவாக நகர்த்துவதற்கு புதையிரதப் பாதைகளைப் பயன்படுத்துகின்றன.
6. ஈரான் தனது உற்பத்தித் தடத்தை தனது எல்லைகளுக்கு அப்பால் விரிவுபடுத்தியுள்ளது. தஜிகிஸ்தான், ரஸ்யா, எத்தியோப்பியா மற்றும் வெனிசூலா போன்ற நாடுகளில் ட்ரோன் மற்றும் ஆயுத தயாரிப்பு ஆலைகளை நிறுவியுள்ளது.
7. ஈரான் ஒரு எதிர்ப்பு அச்சை உருவாக்கியுள்ளது. இது அதன் பிராந்திய கூட்டாளிகளுக்கு (லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா மற்றும் யெமனில் உள்ள ஹூதிகள்) உள்நாட்டில் தங்கள் சொந்த ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தையும் பயிற்சியையும் வழங்குகிறது. இதன் மூலம் ஒரு தன்னிறைவு பெற்ற பரவலாக்கப்பட்ட வலையமைப்பை உருவாக்கியுள்ளது.
8. தடைகள் இருந்தபோதிலும், ஈரான் ரஸ்யாவிலிருந்து முக்கியமான பொருட்கள் மற்றும் மேம்பட்ட அமைப்புகளை (பயிற்சி ஜெட் விமானங்கள் மற்றும் கவச வாகனங்கள் போன்றவை) தொடர்ந்து பெற்று வருகிறது. சீனாவிலிருந்து திட எரிபொருள் கலவைகள் போன்ற சிறப்பு ஏவுகணை கூறுகளை இறக்குமதி செய்கிறது.
9. ஈரான் “செலவு திணிப்பு” உத்தியில் கவனம் செலுத்துகிறது. மேம்பட்ட மற்றும் விலையுயர்ந்த பாதுகாப்புகளை முறியடிக்க மலிவான ஆயுதங்களை அதிக அளவில் உற்பத்தி செய்கிறது.
10. ஈரான் குறைந்த விலை வெடிமருந்துகளை (ட்ரோன்கள்) உற்பத்தி செய்து பயன்படுத்துகிறது. இது பாரம்பரிய விமானப்படைகளின் செலவில் ஒரு சிறு பகுதியிலேயே நம்பகமான தடுப்பை பராமரிக்க உதவுகிறது.

சமீபத்தைய மதிப்பீடுகளின்படி, ஈரான் மாதத்திற்கு 100 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை உற்பத்தி செய்ய முடியும். இது, அவற்றைத் தடுத்து நிறுத்தப் பயன்படுத்தப்படும் விலையுயர்ந்த ஏவுகணைகளின் உற்பத்தி விகிதத்தை விடப் பன்மடங்கு அதிகமாகும்.

**ரஸ்ய மற்றும் சீன உதவி!**

சீனாவும் ரஸ்யாவும் ஆயுத விநியோகம் மற்றும் செயற்கைக்கோள் உளவுத் தகவல்கள் மூலம் ஈரானுக்கு உதவுகின்றன. ஈரான், சீனா மற்றும் ரஸ்யா மூன்று நாடுகளும் இணைந்து, ‘தி அட்லாண்டிக் கவுன்சில்’ எனக் குறிப்பிடும் ஒரு ‘தவிர்ப்பு அச்சை’ உருவாக்குகின்றனர். இந்த அச்சு அமெரிக்கத் தடைகளைத் தவிர்க்க உதவுகிறது.

சீனா, ரஸ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிடமிருந்து தடை செய்யப்பட்ட எண்ணெயை இறக்குமதி செய்வதன் மூலமும், பதிலுக்கு அவர்களுக்கு அதிநவீன இரட்டைப் பயன்பாட்டுத் தொழில்நுட்பத்தை விற்பனை செய்வதன் மூலமும் அவர்களுக்கு உதவுகிறது. ரஸ்யாவின் மறைமுக எண்ணெய் கப்பல் படை, மாற்றுப் பணமளிப்பு முறைகள் மற்றும் பண்டமாற்று வர்த்தகம் என்பனவற்றின் மூலம் அமெரிக்கத் தடைகளை மீறுவதில் பங்கு வகிக்கிறது.

மூன்று நாடுகளுக்குமிடையே ஒரு ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலித் தொடர்பு உள்ளது. சீனா, ரஸ்யா மற்றும் ஈரான் ஆகியவற்றுக்கிடையிலான வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம், மற்றும் அதனுடன் தொடர்புடைய விநியோகச் சங்கிலிகள், புவியியல் மற்றும் குறிப்பிடத்தக்க மேற்கத்தைய பொருளாதார அழுத்தத்தின் விளைவாகும்.

கடுமையான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் காரணமாக, இந்த நாடுகள் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்தைய நாடுகளிடமிருந்து தொழில்நுட்பத்தையும், உதிரிப்பாகங்களையும் நேரடியாக எளிதில் பெற முடியாது. அச்சு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் மேற்கத்தைய நிதியமைப்புக்கு வெளியேயும், மேற்கத்தைய பொருளாதாரக் கட்டுப்பாடுகளின் வரம்பிற்கு வெளியேயும் நடைபெறுவதால், இந்த ஒருங்கிணைப்புச் சங்கிலிகள் தடைகள் மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதை அதிக அளவில் எதிர்க்கின்றன என ‘அட்லாண்டிக் கவுன்சில்’ கூறுகிறது.

‘ஸாஹெட்’ போன்ற ஈரானிய ஆளில்லா விமானங்கள், இறக்குமதி செய்யப்பட்ட மின்னணுவியல் பாகங்கள், இயந்திரங்கள் வழிச்செலுத்தல் கூறுகள், மின்கலங்கள் மற்றும் குறைக்கடத்திகள் ஆகியவற்றின் ஒரு சூழமைப்பைச் சார்ந்துள்ளன.

இந்தப் பாகங்களில் பல அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் யப்பானில் இருந்து வந்தாலும், அவை ஈரானிய உற்பத்தியாளர்களைச் சென்றடைவதற்கு முன்பு, கொள்முதல் வலையமைப்புகள் பெரும்பாலும் சீன விநியோகஸ்தர்கள் அல்லது வர்த்தக நிறுவனங்கள் மூலம் அவற்றைப் பெறுகின்றன. ஈரானுக்கான சீனாவின் இரட்டைப் பயன்பாட்டு ஏற்றுமதிகள் 2024 ஜனவரியில் உச்சத்தை எட்டின.

2022 முதல் ரஸ்யாவும் ஈரானும் ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்தையும், உற்பத்தி அறிவையும் பரிமாறிக்கொண்டு, தங்கள் உற்பத்தித் திறனை விரிவுபடுத்தி வருகின்றன. இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, உக்ரைனில் ரஸ்யா நடத்தும் போருக்கு உதவுவதற்காக, ஈரான் 600 பிரிக்கப்பட்ட ஸாஹெத் – 16 ஆளில்லா விமானங்கள், 1300 ஆளில்லா விமானங்களுக்கான பாகங்கள், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை ரஸ்யாவுக்கு வழங்கியது.

சீன மின்னணு சந்தைகளும், விநியோகஸ்தர்களும் இந்தச் செயல்பாட்டில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆரம்பத்தில் பொதுப்பயன்பாடுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட நிலைமை உணர்விகள் அல்லது செயற்கைக்கோள் வழிசெலுத்தல் தொகுதிகள் போன்ற கூறுகளை, சீன இடைத்தரகர்கள் மூலம் வாங்கி ஈரானிய ஆயுத அமைப்புகளில் ஒருங்கிணைக்க முடியும்.

வர்த்தக மின்னணுவியலைத் தழுவி அமைப்பதில் ரஸ்யாவின் அனுபவமும்

இந்தப் புத்தாக்கச் சூழலுக்கு வலுச் சேர்க்கிறது. அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய இராணுவ இலக்குகளைக் குறி வைப்பதற்காக, ஈரானிய ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளில் சீன செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்புகள் இணைக்கப்பட்டுள்ளதாகச் சில வல்லுனர்கள் நம்புகின்றனர்.

2025 நொவம்பரில் ஈரானின் விமான உற்பத்தித் தொழிற்துறை நிறுவனத்துடன் தொடர்புடைய ஒரு தனி வலையமைப்பு, சீன உணர்விகள் மற்றும் வழிசெலுத்தல் கருவிகளைப் பெறுவதற்காகப் போலி நிறுவனங்களைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

2021 இல் சீன தேசிய விண்வெளி நிர்வாகத்திற்குச் சொந்தமான புவி இருப்பிடத்தைக் கண்டறியும் செயற்கைக்கோள் அமைப்பான பெய்டோவை அணுகுவதற்கான அனுமதியை சீனா ஈரானுக்கு வழங்கியது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போர் தொடங்கியதிலிருந்து, அச்சுறுத்தல் பகுப்பாய்வைக் குழப்புவதற்கும், உண்மையான ஈரானிய இராணுவ நகர்வுகளை மறைப்பதற்கும், திசைதிருப்பும் சமிக்ஞைகளை உருவாக்க ஈரான் பெய்டோவைப் பயன்படுத்தி வருகிறது.

ஏவுகணை மற்றும் வெடிபொருட்கள் உற்பத்தியைத் தொடர்வதற்கான ஈரானியத் திறன், இரசாயன முன்னோடிப் பொருட்கள் மற்றும் தொழில்துறை பொருட்களுக்கான அணுகலைச் சார்ந்துள்ளது. இரசாயனவியலில் ஒரு முன்னோடிப் பொருள் என்பது மற்றொரு சேர்மத்தை உருவாக்கும் ஒரு வேதி வினையில் பங்கேற்கும் ஒரு சேர்மமாகும். இந்தப் பொருட்கள் மேற்கத்தைய ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தாலும், உற்பத்தி பல அதிகார வரம்புகளில் பரவியிருக்கும் போது, அவற்றை அமுல்படுத்துவது மிகவும் கடினம் என, அட்லாண்டிக் கவுன்சில் கூறுகிறது.

- Daily Mirror - 2026 April 5

(பி.கே.பாலச்சந்திரன் இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சுதந்திர ஊடகவியலாளர் ஆவார். அவரது முழுமையான பெயர் பி.கே.பாலச்சந்திரன் நாயர் என்பதாகும்.

அவர் ஊடகத்துறையில் மட்டுமின்றி, சினிமா துறையிலும், ஆக்க இலக்கியத் துறையிலும் ஈடுபாடுள்ள ஒருவராகும்)

**முன்பக்கத்தொடர்ச்சி...**

சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரும், முக்கியமாக இன்றைய ஆளும் கட்சியான ஜே.வி.பியும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 1988 – 89ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பியினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி இந்த ஒப்பந்தத்தை மையமாக வைத்தே நடத்தப்பட்டது.

தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரை, புலிகள் இயக்கம் ஒப்பந்தத்திற்கு தமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியது. பிரேமதாச அரசாங்கத்திடம் ஆயுதங்களும் நிதியும் பிற உதவிகளும் பெற்றுக்கொண்டு, இந்த ஒப்பந்தம் நடைபெறுவதை மேற்பார்வையிட வந்திருந்த இந்திய அமைதிப்படையுடன் புலிகள் போர் புரிந்தது மட்டுமல்லாது, பின்னர் ஒப்பந்தத்தில் இந்தியா சார்பாகக் கைச்சாத்திட்ட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியையும் தற்கொலையாளி ஒருவர் மூலம் படுகொலை செய்தனர்.

இந்தச் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, ஜெயவர்த்தனவுக்குப் பின்னர் இலங்கை ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பிரேமதாச, இந்திய அமைதிப்படையைத் திருப்பி அனுப்பியதுடன், வடக்கு கிழக்கு மாகாண சபையையும் செயல்பட விடாது முடக்கி வைத்தார். பிரேமதாசவைப் பயன்படுத்தி, வடக்கு கிழக்கு மாகாண சபையை முடக்கிய புலிகள், தமது தேவை நிறைவேறிய பின்பு பிரேமதாசவையும் தற்கொலையாளி மூலம் தீர்த்துக்கட்டினர்.

இவ்வாறு பல சம்பவங்கள் நிகழ்ந்துவிட்ட போதிலும், இந்திய – இலங்கை ஒப்பந்தம் இன்னமும் நீடித்திருப்பதுடன், அதன் மூலம் இலங்கை அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தமும் அப்படியேதான் உள்ளது.

அது மாத்திரமின்றி, பிரேமதாசவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க காலங்களிலும் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு செயல்பட்டு வந்துள்ளன.

இன்றைய இலங்கையின் அரசியல் சூழ்நிலையில் சிங்களத் தரப்பிலோ அல்லது தமிழர் தரப்பிலோ மாகாண சபை முறைமையை எதிர்க்கும் எந்தவொரு அரசியல் கட்சியும் இல்லை. மாகாண சபை முறையால் பிரயோசனம் இல்லை என்று சொல்பவர்கள் கூட மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றியே வந்துள்ளனர்.

இன்று ஆட்சியதிகாரத்தில் இருக்கும் ஜே.வி.பி. கட்சி கூட மாகாண சபை முறையை தான் எதிர்க்கவில்லை என வெளிப்படையாக அறிவித்துவிட்டது. இருந்தும் தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் இருக்கும் ஜே.வி.பி. அரசாங்கம் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் காலம் கடத்தி வருகிறது.

தற்போதைய அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும்.

ஒன்று, இனவாத அடிப்படையில் முன்னைய காலங்களில் செய்தது போல, மாகாண சபை முறையை எதிர்ப்பதாக இருக்க வேண்டும்.

இரண்டாவது, இந்த அரசாங்கம் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதால், மக்களின் ஆதரவைப் பெருமளவில் இழந்துள்ளதால், தோல்விப் பயம் காரணமாக தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதாக இருக்கலாம்.

இவை இரண்டும் இல்லையென்றால், அரசாங்கம் இனியும் காலதாமதம் செய்யாமல் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, மக்கள் விருப்புக்கும் தீர்ப்புக்கும் வழிவிட வேண்டும். தேர்தலை நடத்தாமல் இருப்பதற்காக அரசாங்கம் முன்வைக்கும் சாக்குப்போக்குகளை இனியும் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதை அரசாங்கம் புரிந்து கொள்வது அவசியமானது.

**15ம் பக்கத்தொடர்ச்சி....**

நாடுகளுக்கு எதிராகத் தலையிட வடிவமைக்கப்பட்ட புதிய ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய வடிவத்தை கட்டமைக்க அது முயற்சி செய்கிறது. எனினும் இது ஒரு விளக்கமே ஆகும். ஏகாதிபத்தியத்தின் புதியதொரு கட்டத்தை வரையறுப்பதாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஈரான் மீதான போர் தனது மேலாதிக்கத்தைப் பராமரிக்கும் ஒரு வழிமுறையாக இராணுவ சக்தியைப் பயன்படுத்துவதன் வரம்புகளை எடுத்துக் காட்டுகிறது. இதற்கு ஈரானின் எதிர்ப்பும் அது மேற்கொண்டுவரும் சமச்சீரற்ற போரும் அந்தப் பகுதியிலும் உலகிலும் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு நீடித்த விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்பதில் ஐயமேதுமில்லை.

**தமிழில்: வீ. பா. கணேசன்**

# ஏகாதிபத்தியத்தின் இன்றைய கட்டத்தைப் புரிந்து கொள்வது

சமீப காலமாக அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கீழ் அமெரிக்காவின் அப்பட்டமான இராணுவ ஆக்கிரமிப்பை நாம் கண்டு வருகிறோம். வெனிசுவேலா மீதான தாக்குதல், அந்நாட்டின் அதிபர் மதுரோவும் அவரது மனைவியும் அமெரிக்காவிற்குக் கடத்தப்படுவதற்கு வழிவகுத்தது. இதைத் தொடர்ந்து, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது போர் தொடுத்து வருகிறது. இந்தத் தாக்குதல்களின் முதல் அலை, அயதுல்லா கமேனியும் இன்னபிற இராணுவத் தலைவர்களும் கொல்லப்படுவதற்கு வழிவகுத்தது. எண்ணெய் முற்றுகையை கியூபாவின் மீது முழுமையாகத் திணித்தபிறகு, கியூபாவைக் கைப்பற்றப் போவதாகவும் ட்ரம்ப் அச்சுறுத்தி வருகிறார். இவை அனைத்திற்கும் முன்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக, அமெரிக்காவின் முழு ஆதரவுடன், காஸா பகுதியின் மீது இனப்படுகொலைப் போரை இஸ்ரேல் நடத்தி வருகிறது. அங்கு போர் நிறுத்தம் என்பது இருந்தபோதிலும், இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்கின்றன.

ஏகாதிபத்திய சக்திகள் நிர்ணயித்த விதிகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கு என்பதையே தலைகீழாக்கி, அதை மீறும்படியான, இந்த வன்முறையை மேற்கொள்ளும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் சற்றும் பொறுப்பற்ற தன்மையிலான இந்தக் கட்டத்தை நாம் எவ்வாறு காண்பது?

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் தற்போதைய வடிவத்தைப் புரிந்துகொள்ள, கடந்த சில தசாப்தங்களில் ஏகாதிபத்தியம் எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஓர் அமைப்பு என்ற வகையில், ஏகாதிபத்தியம் இயல்பாகவே ஆக்கிரமிப்பு, சூறையாடல் தன்மை கொண்டதாகும். இதற்குக் காரணம், முதலீடு செய்வதற்கும், இலாபம் ஈட்டுவதற்குமாக தொடர்ந்து புதிய பகுதிகள், வளங்கள், சந்தைகளை ஊடுருவிக் கைப்பற்ற நிதிமூலதனம் முயல்கிறது. ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கான அடிப்படை, ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் ஏகபோக காலகட்டம் என்ற லெனினின் வரையறை ஆகும். ஏகாதிபத்தியம், புதிய சந்தைகள், வளங்கள் மற்றும் மூலதனத்தை ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளைக் கண்டுபிடிப்பதற்கான முதலாளித்துவ சக்திகளின் தேவைகளால் உந்தப்படுகிறது. இது மோதல்களுக்கும் உலகளாவிய சுரண்டலுக்கும் இட்டுச் செல்கிறது என்று லெனின் வாதிட்டார்.




**ஏகாதிபத்தியத்தின் புதிய அம்சம்: சர்வதேச நிதிமூலதனம்**

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏகாதிபத்தியம் எவ்வாறு மாறியது, புதிய அம்சங்கள் எவ்வாறு வளர்ந்தன என்பதை நாம் பார்க்க வேண்டும். அந்த மாற்றத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் நிதிமூலதனத்தின் இயல்புதான். வங்கி மூலதனம், தொழில்துறை மூலதனம் ஆகியவற்றின் இணைப்பால் நிதிமூலதனம் உருவாக்கப்படுவது குறித்து லெனின் பேசினார். அதாவது, ஏகபோகத்திற்கு முந்தைய கட்டத்தில், தொழில்துறை மூலதனத்திற்கும், வங்கி மூலதனத்திற்கும் இடையே தெளிவான ஒரு இடைவெளி இருந்தது.

**பிரகாஷ் காரத்**

ஏகபோகக் கட்டத்தில், இந்த இரண்டு மூலதனங்களின் இணைப்பு, நிதிமூலதனம் தோன்றுவதற்கு இட்டுச் சென்றது. அதுவே மூலதனத்தின் மேலாதிக்க வடிவமாகவும் மாறியது. இந்த நிதிமூலதனம் என்பது மூலதனத்தைப் பெருமளவில் குவிப்பதைக் குறிக்கிறது. மூலதனக் குவிப்பானது ஜெர்மன் நிதிமூலதனம், பிரிட்டிஷ் நிதிமூலதனம், அமெரிக்க நிதிமூலதனம் போன்றவை வளர்ச்சியடைய வழிவகுத்தது. தமது மூலதனத்தை புதிய பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், இந்தக் காலனிகளின் வளங்களைச் சுரண்டுவதற்கும் ஆன அவற்றின் போட்டி, மோதல் ஆகியவற்றினால் இந்த நிதிமூலதனங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன.

இந்த முரண்பாடுதான் இரண்டு உலகப்பெரும் போர்களுக்கு வழிவகுத்த, ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான உள்முரண்பாடுகளின் மையமாக இருந்தது. இருப்பினும், இரண்டாம் உலகப்பெரும் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், இந்த ஏகாதிபத்திய உள்முரண்பாடு போருக்கோ, மோதலுக்கோ ஒரு காரணமாக இருப்பதை நிறுத்திக் கொண்டன. ஏனெனில், முதலாவதாக, சோவியத் யூனியனின், சோஷலிசத்தின் அச்சுறுத்தல் ஏகாதிபத்திய நாடுகளின் தொகுப்பில் ஓரளவிற்கான ஒற்றுமையை உருவாக்கியது. அமெரிக்கா, இந்த ஏகாதிபத்திய தொகுப்பின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக ஆனது. அனைத்து ஏகாதிபத்திய சக்திகளும் அவற்றின் நிதிமூலதன நலன்களும் அரசியல்ரீதியாக உயிர்வாழ, ஓரளவிலான ஒத்துழைப்பு, மோதல்களைத் தணிப்பது ஆகியவை அவசியமாக இருந்தது.

இரண்டாவதாக, நிதிமூலதனத்திற்குள்ளேயே ஒரு மாற்றம் நிகழ்ந்தது. ஒவ்வொரு நாட்டிலும் நிதிமூலதனம் பெருமளவில் குவிந்து மையப்படுத்தப்பட்டதால், தேசிய நிதிமூலதனம் மட்டுமே உள்நாட்டில் முதலீடு செய்வது என்பது சாத்தியமற்றதாகியது. வெளி முதலீடுகளை விரிவுபடுத்த மற்ற முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் நிதிமூலதனங்களின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. அனைத்து தேசிய நிதிமூலதனங்களும் மையப்படுத்தப்பட்டு, ஒரு பெரிய தொகுப்பாக இணைந்து, சர்வதேச அளவில் இயங்கும் மூலதனமாக செயல்பட்டன. இதுவே சர்வதேச நிதிமூலதனம் (IFC) என்று அழைக்கப்படுகிறது.

நிதிமூலதனத்தின் குவிப்பும் மையப்படுத்தலும் சர்வதேச நிதிமூலதனமாக மாறியதானது ஏகாதிபத்தியத்தின் கட்டமைப்பிலும் செயல்பாட்டிலும் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தியது. முதலாவதாக, அனைத்து ஏகாதிபத்திய சக்திகளும்

இப்போது சர்வதேச நிதிமூலதனத்தால் ஒன்றிணைக்கப்பட்டு, இலாபத்தை அதிகரிக்க, உலகின் வளங்களையும் சந்தைகளையும் கூட்டாகச் சுரண்டுகின்றன. ஒன்றுக்கொன்று முரண்படும் அல்லது மோதும் தேசிய நிதிமூலதனங்கள் இல்லாததால், இது அதன் பொதுநலனாக ஆகிறது. எனவே ஏகாதிபத்திய உள்முரண்பாடு இந்த சக்திகளுக்கு இடையேயான போராக வெளிப்படுவது நின்றுபோனது.

அணு ஆயுதங்களின் இருப்பினால், ஏகாதிபத்திய முகாமிற்கும் சோஷலிச முகாமிற்கும் இடையே போருக்கான ஆபத்து நனவாக முடியவில்லை. இந்த முகாம்களுக்கு இடையேயான இந்த மோதல் பனிப்போர் என அறியப்பட்டது. அதாவது இரண்டு முகாம்களுக்கு இடையே நேரடி ஆயுத மோதல்களோ, விரோதங்களோ இல்லை. ஆனால், வேறு வழிகளில், தங்கள் அரசியல், சித்தாந்த, பொருளாதார போரை அவை நடத்திக் கொண்டிருந்தன. ஏகாதிபத்தியத்தால் மூன்றாம் உலகில் போர்கள் மேற்கொள்ளப்பட்டன.

**ஏகாதிபத்திய உலகமயமாக்கலும் சர்வதேச நிதிமூலதனமும்**

1991 இல் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதுடன் பனிப்போர் கட்டம் முடிவுக்கு வந்தது. சர்வதேச நிதிமூலதனம் 1980களில் ஒரு சக்தியாக உருவெடுத்தது. அது உலகமயமாக்கல் என அறியப்படுவதற்கு ஒரு முன்னோட்டமாக அமைந்தது. இது உண்மையில், ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலகமயமாக்கல், சர்வதேச நிதிமூலதனம் உலகெங்கும் சுதந்திரமாக நகர, உலகின் எந்த மூலையிலும் தன் மூலதனத்தை நிலைநிறுத்த, எந்த பங்கு அல்லது நிதி சந்தையிலும் நுழைய, விரைவாக இலாபம் ஈட்ட, விரைவான இலாபத்தின் தேவைக்கு ஏற்ப மூலதனத்தை வேறொரு இடத்திற்கு மாற்ற விரும்பியது.

ஊகத்தன்மை கொண்ட இந்த மூலதனத்தின் இயல்பு, விரைவான மூலதன ஓட்டங்கள், தேசிய எல்லைகளையும் வரம்புகளையும் உடைப்பதற்குத் தேவைப்பட்டது. மேலும் சர்வதேச நிதிமூலதனத்தின் ஆதிக்கம் காரணமாக உலகமயமாக்கல் நவதாராளவாதத்தின் சகாப்தத்தையும் கொண்டுவந்தது. நவதாராளவாதக் கொள்கைகள், 1980களில் அமெரிக்காவில் அதிபர் ரொனால்ட் ரீகன், பிரிட்டனில் பிரதமர் மார்கரெட் தாட்சர் ஆகியோரின் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

எனவே, சர்வதேச நிதிமூலதனத்தின் ஆதிக்கம், ஏகாதிபத்திய உலகமயமாக்கல் செயல்பாடு, இந்த முழு கட்டமைப்பையும் அமெரிக்கா தலைமையேற்று நடத்துவது ஆகியவை சோவியத் யூனியன் வீழ்ந்தபோது மிகப்பெரும் வெற்றியை ஈட்டியது. சர்வதேச நிதிமூலதனம் சோவியத் யூனியனின் முன்னாள் குடியரசுகளையும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் தன் வலைக்குள் கொண்டுவந்தது.

**அமெரிக்க மேலாதிக்கமும் இராணுவத் தலையீடுகளும்**

1990களில் அறியப்பட்டபடி, ஒரே வல்லரசாக அமெரிக்கா இருந்த ஒருமுனைப்பட்ட உலகம் உருவானது. ஏகாதிபத்தியம் மற்றும் நிதிமூலதனத்தின் வெற்றி இறுதியான ஒன்றாகத் தோன்றியது. இக்காலகட்டமானது நிதிசார்ந்த உலகமயமாக்கல், நவதாராளவாத முதலாளித்துவ ஒழுங்கை திணிப்பது ஆகியவற்றின்மூலம் சமகால ஏகாதிபத்தியம் குறிக்கப்பட்டது. மேலும், இது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் காலகட்டத்தையும் கொண்டுவந்தது. இக்காலகட்டத்தில், அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய கூட்டணி தொடர்ச்சியான தலையீடுகளை நடத்தியது. முதலில் யூகோஸ்லோவியா உடைத்து நொறுக்கப்பட்டு, செர்பியா மீது அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. அதிபர் புஷ்ஷின் கீழ் ஈராக்கின் மீது அப்பட்டமான ஆக்கிரமிப்பும் நடந்தது. அதைத் தொடர்ந்து லிபியாவிலும் சிரியாவிலும் இராணுவத் தலையீடுகள் நடந்தன. இந்த அனைத்து இராணுவத் தலையீடுகளுமே அமெரிக்க மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து, அந்தப் பகுதியின் முகவராக இருந்த அவற்றைக் கட்டுப்படுத்த முயன்ற இஸ்ரேலை கடுமையாக எதிர்க்கும் அரசாங்கங்களை அகற்றுவதாகவே இருந்தன.

எனவே சர்வதேச நிதிமூலதன சகாப்தத்திலோ அல்லது பனிப்போரின் முடிவிலோ போர் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கருதுவதற்கில்லை. இரண்டாம் உலகப்பெரும்போருக்குப் பிந்தைய காலகட்டம் முழுவதும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய ஒழுங்கு மீண்டும், மீண்டும் இராணுவ ரீதியாகத் தலையிட்ட போர்களும் இராணுவத் தலையீடுகளும் இலத்தீன் அமெரிக்காவிலும் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தொடர்ந்தன. எனவே ஏகாதிபத்திய உள்முரண்பாடுகளால் உருவாகும் போர்களுக்குப் பதிலாக, இன்று ஏகாதிபத்தியம் தன் முன்னாள் காலனிகளுக்கு எதிராகவோ அல்லது – இப்போது ‘குளோபல் சவுத்’ என்று அழைக்கப்படும் – மூன்றாம் உலகைச் சேர்ந்த நாடுகளுக்கு எதிராகவோ, போர்களை நடத்துகிறது. அமெரிக்காவால் நேரடியாகவோ அல்லது இஸ்ரேல் போன்ற அதன் முகவர்கள் மூலமாகவோ தலையீடுகள் தொடர்கின்றன. எனவே, ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு இயல்பு இன்னும் தொடர்கிறது. ஏனெனில், ஏகாதிபத்தியம் என்பதே கொள்ளையிடும் ஓர் அமைப்பே ஆகும்.

**இரட்டை முறைகள்: பொருளாதாரமும் இராணுவமும்**

21 ஆம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியம் இரண்டு வகையான அழுத்தங்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். ஒன்று பொருளாதாரத் தடைகள் மற்றும் பொருளாதார ரீதியான போர். மற்றொன்று, நேரடி இராணுவத் தலையீடுகள். பிந்தைய நடவடிக்கைகளுக்காக, உலகெங்கும் இராணுவத் தளங்கள் மற்றும் நிறுவனங்களின் சங்கிலியை அமெரிக்கா பராமரிக்கிறது. உலகின் 80 நாடுகளில் இத்தகைய தளங்கள் உள்ளன. இந்தத் தளங்களில் சுமார் 1,70,000 முதல் 2,50,000 வரையிலான இராணுவ, பொது பணியாளர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கத்திய சக்திகளின் நேட்டோ கூட்டணியும் இத்தகைய இராணுவத் தலையீடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இரண்டாவது ஆயுதம் பொருளாதார அழுத்தம் மற்றும் போர் ஆகும். அமெரிக்காவும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளும் தங்களின் மேலாதிக்கத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதுகின்ற, அல்லது அமெரிக்காவின் கட்டளைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கின்றன. அத்தகைய நாடுகள் மீது பல்வேறு வகையான தடைகள் விதிக்கப்படுகின்றன. அவை பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்களாகவோ அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகளாகவோ அறிவிக்கப்படுகின்றன. இன்றும்கூட, அமெரிக்காவும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளும் விதித்த தடைகளின்கீழ் பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மிக முக்கியமானது நீண்டகாலமாகவே இத்தகைய தடைகளுக்கு உட்பட்டிருக்கும் கியூபா, வெனிசுவேலா, ஈரான், வடகொரியா, ரஷ்யா, பெலாரஸ் மற்றும் பல நாடுகளின் மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. பொருளாதார சீர்குலைவு மூலம் ஆட்சி மாற்றத்திற்கு முயற்சிக்கப்படலாம். அவை வெற்றி

பெறாவிட்டால், ஈராக்கில் ஆட்சி மாற்றத்திற்காகப் பயன்படுத்தியதைப் போல், சிக்கலான நேரங்களில் இராணுவ முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே உலகமயமாக்கலின் கீழ் ஏகாதிபத்தியத்தின் இந்த அம்சம் கவனிக்காமல் விடுபடக் கூடாது. இந்த உலகமயமாக்கல் முகமூடியின்கீழ், நவதாராளவாத ஆட்சியை மறுக்கும் அல்லது சர்வதேச நிதிமூலதனத்தின் கட்டளைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து, இதிலிருந்து மாறுபட்ட பாதையில் செல்ல முயற்சிக்கும் எந்தவொரு நாடும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய ஒழுங்கின் தாக்குதலுக்கு ஆளாகிறது என்பதை நாம் காண்கிறோம்.

சமகால ஏகாதிபத்தியத்தின் அம்சங்களைப் புரிந்துகொள்வது அவசியம். சர்வதேச நிதிமூலதனத்தின் ஆதிக்கம், முதலாளித்துவ உலகம் முழுவதும் நவதாராளவாத ஒழுங்கின் பரவல், ‘குளோபல் சவுத்’தின் மீது தொடரும் சுரண்டல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நவகாலனித்துவ ஒழுங்கு ‘பறிமுதல் மூலம் பொருள்குவிப்பை’ பின்தொடர்கிறது. பொதுவளங்களை தனியார் மயமாக்குகிறது. வளரும் நாடுகளின் இயற்கை வளங்களை கைப்பற்றுகிறது. அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் காப்புரிமைகளை கட்டுப்படுத்தி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை ஏகபோகமாக்கி அதன்மூலம் இலாபம் ஈட்டுகிறது. நமது 18வது (CPM) கட்சிக் காங்கிரஸ் இதை ‘கையகப்படுத்தல் மூலம் பொருள்குவிப்பு’ என்று விவரித்தது.

சமகால ஏகாதிபத்தியத்தின் புதிய அம்சங்களில் ஒன்று, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது எவ்வாறு புதியதொரு கட்டத்திற்கு வழிவகுத்தது என்பதாகும். சைபர்நெட்டிக் புரட்சி, டிஜிட்டல் தொழில்நுட்பம் போன்றவை அமெரிக்காவில் ஒரு சில ஏகபோக தொழில்நுட்ப நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக் கட்டுப்படுத்தும் ஏழு தொழில்நுட்ப, சிப் மற்றும் சமூக ஊடக நிறுவனங்கள் உள்ளன. எனவே அமெரிக்கா, முதலாளித்துவ, ஏகாதிபத்திய முறையின் மீதான தன் ஆதிக்கத்தை அனைத்துத் துறைகளிலும், பொருளாதாரம் மற்றும் சமூகத்திலும், தொழில்நுட்பம் மற்றும் அதன் பயன்பாட்டின் மூலம் பராமரிக்க முயற்சிக்கிறது. இந்த தொழில்நுட்பத்தின் மீதான தனது ஏகபோகம் அல்லது தலைமையை தக்கவைக்கவும், மற்றவர்களை – குறிப்பாக சீனாவை – இந்தத் தொழில்நுட்பத்திலிருந்து பயன்பெறுவதை தடுக்கவும் மறுக்கவும் அமெரிக்கா முயற்சிக்கிறது. ஏனெனில், சீனா இப்போது அமெரிக்காவின் இந்த முன்னணி நிலைக்குச் சவால் விடும் மிகப்பெரும் பொருளாதார சக்தியாக மாறியுள்ளது.

**தற்போதைய சூழல்**

இது தற்போதைய சூழலுக்கு நம்மைக் கொண்டுவருகிறது. ட்ரம்பின் கீழ் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தற்போதைய பொறுப்பற்ற இராணுவ ஆக்கிரமிப்பு மூன்று காரணிகளின் பின்னணியில் பார்க்கப்பட வேண்டும்.

முதலாவதாக, 2008 உலகளாவிய நிதி நெருக்கடியுடன் தொடங்கிய நவதாராளவாத நெருக்கடி. ஏகாதிபத்திய நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் இந்த நெருக்கடிக்கு எந்தத் தீர்வையும் காண முடியவில்லை. இரண்டாவதாக, அமெரிக்காவின் உலகளாவிய செல்வாக்கு மற்றும் பொருளாதார வலிமையின் நீண்டகால வீழ்ச்சி. மூன்றாவதாக, சீனாவின் எழுச்சியும் அதன் பொருளாதார வலிமையும் அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்திற்கு தீவிர அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. ட்ரம்ப் அதிபராவதற்கு முன்பே, அவருக்கு முந்தைய அமெரிக்க அதிபர்கள் சீனாவினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலின் மீது கவனம் செலுத்தி, சீனாவை கட்டுப்படுத்தவும், தடுக்கமுடியாத ஒரு பொருளாதார சக்தியாக அதை மாற்றக்கூடிய தொழில்நுட்பம் மற்றும் வளங்களை மறுக்கவும் முயற்சிகளை மேற்கொண்டனர். இருப்பினும், இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சீனாவின் வளர்ச்சியையும் அதன் ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தின் பயன்பாட்டையும் கட்டுப்படுத்தத் தவறிவிட்டன.

இரண்டாவதாக, அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிரான நாடுகள், அரசாங்கங்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் மற்றும் அழுத்தத்தை பயன்படுத்துவது அதிபர் ஒபாமாவின் நாட்களிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவை பைடன் மற்றும் ட்ரம்ப்பால் தொடரப்பட்டது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டிற்கும் எதிரான, மேற்கு ஆசியா பகுதியின் முக்கிய சக்தியான ஈரான் இதில் ஒரு முக்கிய இலக்காக இருந்தது.

**சரிவடையும் மேலாதிக்கத்தைப் பராமரிக்கும் பொறுப்பற்ற நடவடிக்கைகள்**

மிக முக்கியமாக, அமெரிக்க ஆளும் வர்க்கங்கள் தங்களது பொருளாதார வலிமையையும் ஆதிக்கத்தையும் மீட்டெடுக்க வழிகளைத் தேடி வந்தன. இந்தப் பின்னணியில் ட்ரம்ப் ஜனவரி 2025 இல் பதவியேற்றார். முதலில் அமெரிக்கா என்ற முழக்கத்தை செயல்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவின் நட்பு நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு எதிரான அழுத்தமிக்க வரிகளின் அமுலாக்கம், அமெரிக்காவின் உற்பத்தித் துறையில் மூலதனம் முதலீடு செய்யுமாறு அவற்றை வற்புறுத்துவது ஆகியவற்றின்மூலம் அமெரிக்க பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டதாகும். மேற்கத்திய அரைக்கோளம் என்று அழைக்கப்படும் இலத்தீன் அமெரிக்கா பகுதியை அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ் இருப்பதை உறுதி செய்ய மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் – மன்றோ கோட்பாட்டிற்கு புத்துயிர் ஊட்டுவது – தென் அமெரிக்கா முழுவதிலும் வலதுசாரி ஆட்சிகளை நிறுவுவதற்கான முயற்சிகள், வெனிசுவேலாவின் மிகப்பெரும் எண்ணெய் வளங்களைக் கட்டுப்படுத்துவது போன்ற பொருளாதார பரிமாணமும் இதில் அடங்கியுள்ளது.

அதிபர் ட்ரம்ப், அவரது முன்னோடிகளோடு ஒப்பிடும்போது, வெனிசுவேலா சம்பவத்தில் காணப்பட்டதுபோல், இராணுவ நடவடிக்கையை நாட அதிக வாய்ப்புள்ளவராக இருக்கிறார். கடந்த ஜூன் 2025 இல் இஸ்ரேலிய தாக்குதலுடன் இணைந்த வகையில் ஈரானின் மூன்று அணு தளங்களை அவர் குண்டுவீசித் தாக்கினார். இப்போது இஸ்ரேலிய தூண்டுதலால் ஈரான் மீது ஆக்கிரமிப்பைத் தொடங்கியுள்ளார்.

ஈராக் விஷயத்தில் புஷ் செய்தது போல, ஐக்கியநாடுகள் சபையில் தனது தலையீட்டிற்கான நியாயத்தை முன்வைப்பது குறித்து ட்ரம்ப் சற்றும் கவலைப்படவில்லை. இந்த இராணுவ நடவடிக்கைக்கு காங்கிரஸிடம் அங்கீகாரம் கோரவும் இல்லை. இவை அனைத்துமே எந்த நெறிமுறையையும் வரம்புகளையும் அங்கீகரிக்காத, ஒரு அடாவடி ஏகாதிபத்தியத்தின் வடிவமாகவே அது தோன்றுகிறது. அமெரிக்காவின் பொருளாதார வலிமையும் அரசியல் செல்வாக்கும் குறைந்தபோதிலும், பலமுனை உலகம் வளர்ந்துவந்த போதிலும், அது உலகில் மிகவும் வலிமையான இராணுவ சக்தியாகவே தொடர்கிறது. இந்த இராணுவ சக்தியை, தன் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த விவேகமின்றிப் பயன்படுத்துவது, உண்மையில் ஒரு நிர்ப்பந்தத்தின் அறிகுறியே ஆகும். வரம்பற்ற ஏகாதிபத்தியம் என்ற சொல்லைப் பொறுத்தவரை, கடந்த ஒரு தசாப்தத்தில் வெளிப்பட்ட அமெரிக்க மேலாதிக்கத்தை பராமரிக்க, சீனாவை எதிர்கொள்ள, விரோதமான ஆட்சிகளாகக் கருதப்படும்

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# எதிர்காலப் போர் ஏற்கெனவே வந்துவிட்டது!



ஈரானில் நாம் காண்பது மேற்கு ஆசியாவில் நிலவும் ஸ்திரமின்மையின் மற்றுமொரு அத்தியாயம் மட்டுமல்ல, அது போரின் உடனடி எதிர்காலத்தின் ஒரு முன்னோட்டம். அந்த எதிர்காலம், இனி பெரிய இராணுவக் களங்களான விமானம் தாங்கிக் கப்பல்கள், அதிநவீன போர் விமானங்கள் அல்லது அதிக விலை கொண்ட அமைப்புகளால் ஆதிக்கம் செலுத்தப்படமாட்டாது. மாறாக, அளவு, தானியக்கம் மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாறுபட்ட தர்க்கத்தால் ஆளப்படும்.

தற்போது அந்தக் கருத்து தெளிவாக உள்ளது. இராணுவ மேலாதிக்கம் என்பது, இனி மிகவும் நவீன ஆயுதத்தைக் கொண்டிருப்பதை மட்டும் சார்ந்திருக்கவில்லை. மாறாக, செயற்கை நுண்ணறிவால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு வழிநடத்தப்படும். அது விலை மலிவான அமைப்புகளைப் பெருமளவில் பயன்படுத்துவதைச் சார்ந்துள்ளது.

இந்தப் புதிய சூழலில், ஆயிரக்கணக்கான டொலர்கள் மட்டுமே செலவாகும் ட்ரோன்கள், மில்லியன்கணக்கான டொலர்கள் செலவாகும் பாதுகாப்பு அமைப்புகளுக்குச் சவால் விட முடியும். இது இராணுவ சக்தியின் பாரம்பரிய சமன்பாட்டை அடிப்படையாக மாற்றுகிறது.

கடந்த வாரம் 'வாசிங்டன் போஸ்ட்' (Washington Post) ஓர் அதிர்ச்சியூட்டும் புள்ளிவிபரத்தை வெளியிட்டது. ஈரானுக்கு எதிரான அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் முதல் வாரத்தில், தற்காப்பு நடவடிக்கைகளில் கிட்டத்தட்ட 71 சதவீதமான ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஒரு தடுப்புத் திறனை உருவாக்க, அமெரிக்காவுடன் சமமான தொழில்நுட்ப நிலையில் போட்டியிடத் தேவையில்லை என்பதை ஈரான் நிரூபித்துள்ளது.

எதிரியின் பாதுகாப்பு அரண்களை முறியடிக்கும் திறன் கொண்ட ஆளில்லா விமானங்கள், குறைந்த விலை ஏவுகணைகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளை அது பெருமளவில் உற்பத்தி செய்தால் மட்டும் போதும். "துல்லியமான பெருக்கம்" என்று அழைக்கப்படும், போதுமான அளவு துல்லியத்தையும் இணைத்து, போரில் செலவு – செயல்திறன் விகிதத்தை முற்றிலும் மாற்றி விடுகிறது.

**எமிலியா ரீட் (Emilia Reed)**

21 ஆம் நூற்றாண்டுப் போரானது, பாரம்பரிய ஆயுதங்களைப் போலவே, தொழில்துறைத் திறன், தரவுக்கான அணுகல் மற்றும் மென்பொருள் மேம்பாடு ஆகியவையும் முக்கியமானதாக இருக்கும் ஒரு களத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. பரவலாக்கப்பட்ட உணர்விகள், வணிகரீதியான செயற்கைக்கோள் படங்கள், தகவல் தொடர்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் ஆகியவை வழக்கமான இராணுவக் கட்டமைப்பைச் சார்ந்திருக்காமல், நிகழ்நேர செயல்பாட்டு ஒருங்கிணைப்பைச் சாத்தியமாக்குகின்றன.

பெரும்பாலும் கவனிக்கப்படாத ஒரு மையக்கூறு இதில் அடங்கியுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், இராணுவ – தொழிற்துறை வளாகத்திற்கும் இடையிலான வரலாற்று உறவு, சுதந்திரம் மற்றும் உலகளாவிய இணைப்பின் சின்னமாக முன்வைக்கப்படும் இணையம், அமெரிக்காவின் பாதுகாப்பு மேம்பட்ட ஆராய்ச்சி முகமையால் (DARPA - Defence Advance Research Agency) நிதியளிக்கப்பட்ட ஓர் இராணுவத் திட்டமாகவே உருவானது.

மேம்பட்ட கணனி முதல் செயற்கை நுண்ணறிவு வரை, அன்றாட வாழ்க்கையைக் கட்டமைக்கும் பல தொழில்நுட்பங்கள், அமெரிக்கப் பாதுகாப்புத் துறையால் (டொனால்ட் ட்ரம்பினால் போர்த் துறை என்று மறு பெயரிடப்பட்டது) நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் இருந்தே உருவானவை.

பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இந்தச் செயல்முறை புதிதல்ல. தற்போது டிஜிட்டல் பொருளாதாரத்தின் முழுத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் நிறுவனங்கள், அமெரிக்க இராணுவச் செலவினங்களின் காரணமாகவே, நேரடியாகவோ மறைமுகமாகவோ வளர்ந்தன. டிஜிட்டல் அனிமேசன் தொடர்பான முன்னேற்றங்கள் முதல் பாலன்டிர் (Palantir) போன்ற பிரமாண்டமான தரவுப் பகுப்பாய்வுத் தளங்கள் வரை, தொழில்நுட்பப் புத்தாக்கத்திற்கும், இராணுவ உத்திக்கும் இடையிலான தொடர்பு கட்டமைப்பு ரீதியானது.

ஈரானுடனான மோதல் இந்தத் தர்க்கத்தின் பொதுமைப்படுத்தலை முன்னிறுத்துகிறது. போர் என்பது இனி வரம்பற்ற நிதி ஆதாரங்களைக் கொண்ட வல்லரசுகளின் ஏகபோக உரிமை அல்ல. எளிதில் அணுகக்கூடிய தொழில்நுட்பம், பரவலாக்கப்பட்ட உற்பத்தி மற்றும் திறந்த அறிவு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு, சிறிய சக்திகள் இராணுவ மேலாதிக்கத்தை ஓரளவிற்காவது சவால் செய்ய அனுமதிக்கிறது.

ஆனால், இது ஒரு பாதுகாப்பான உலகத்தைக் கொண்டு வருவதாக அமையாது. மாறாக, இது போரை மலிவாக்குகிறது. அதைத் தொடங்குவதற்கான அரசியல் செலவுகளைக் குறைக்கிறது. மேலும், போரை நடத்தக்கூடிய தரப்பினரின் எண்ணிக்கையைப் பெருக்குகிறது. தானியக்கமானது, நெறிமுறைகளால் தீர்மானிக்கப்படும் அபாயகரமான முடிவுகள், கட்டுப்படுத்தக் கடினமான தன்னாட்சி அமைப்புகள் மற்றும் பொறுப்புக்கூறலைத் தடுக்கும் தொழில்நுட்ப வெளிப்படைத்தன்மை இன்மை போன்ற முன்னெப்போதும் இல்லாத அபாயங்களையும் அறிமுகப்படுத்துகிறது.

நாம் ஒரு வரலாற்று மாற்றத்தை எதிர்கொள்கிறோம். எதிர்காலப் போர் என்பது ஆயுதங்கள் சார்ந்ததாக மட்டுமல்லாமல், தரவுகள், வலையமைப்புகள் மற்றும் நெறிமுறைகள் சார்ந்ததாகவும் இருக்கும். மேலும், இணையத்தின் விடயத்தில் நிகழ்ந்தது போலவே, தற்போது இராணுவத்துறையில் உருவாக்கப்பட்டு வருபவை காலப்போக்கில் பொதுமக்களின் வாழ்க்கையிலும் ஊடுருவி, பொருளாதாரங்கள், தகவல் தொடர்புகள் மற்றும் அதிகார உறவுகளை மறு வடிவமைக்கும்.

(இந்தக் கட்டுரை கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான **Granma** வில் 2026 மார்ச் 24 ஆம் திகதி வெளிவந்ததாகும்)